விலை ரூபா: 5.00 பககஙகள:-பதது Registered as a News paper in Sri Lanka

வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 06 வெள்ளிக்கிழமை (22.11.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 338

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## நெடுந்தீவில் மக்கள் போராட்டம் தொடர்கிறது

# ஈ.பி.டி.பி வெளியேறும் வரை இன்று முதல் உண்ணாவிரதம்

(நெடுந்தீவு)

**நெடுந்தீவில் முகாமிட்டுள்ள ஈ.பி.டி.பியினர் அங்கிருந்து வெளியேறும் வரை சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் இன்று முதல் ஈடுபடுவதென அப் பகுதி மக்கள் முடிவு செய்துள்ளனர்.**

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு வசதியாக அங்கு பெரிய பந்தல் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஈ.பி.டி.பியினருக்கு எதிரான போராட்டம் நெடுந்தீவில் இடம்பெற்று வருகின்ற இவ் வேளையில் தீவகத்தின் ஏனைய பகுதிகள் மற்றும் யாழ்ப்பாணத்திலும் நெடுந்தீவு மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

நெடுந்தீவில் இடம்பெற்றுவருகின்ற போராட்டத்தினால் அப் பகுதியின் இயல்பு நிலைமை மோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

நெடுந்தீவுக்கும் ஏனைய பகுதி

(10ம் பக்கம் பார்க்க)







## உதவி வழங்கும் ஒஸ்லோ மாநாட்டில்

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் மட்டுமே புலிகள் பங்குபற்றுவர்!

### அமைச்சர் ஜி.எல்: பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**இம் மாதம் 25ந் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டோம் என்று இந்தியா இதுவரை எந்தவிதமான அறிவித்தல்களையும் விடுவிக்கவில்லை.**

**நோர்வேக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி தலைமையிலான குழுவினரை மாநாட்டில் பங்கு கொள்ளச் செய்வது தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாக அமைச்சர பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஒஸ்லோவில் 25ந் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு தொடர்பாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுப் பத்திரிகையாளர் மாநாடு

பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இந்தியாவின் பங்கேற்றல் தொடர்பாக மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மாநாடு மூன்று கட்டங்களாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கைக்கு பொதுவான உதவிகள் வழங்குவது தொடர்பான விடயங்கள் ஒரு கட்டமாகவும், வடக்கு


ஒஸ்லோவில் 25ந் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு தொடர்பாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுப் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார். அப் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இந்தியாவின் பங்கேற்றல் தொடர்பாக மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள மாநாடு மூன்று கட்டங்களாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கைக்கு பொதுவான உதவிகள் வழங்குவது தொடர்பான விடயங்கள் ஒரு கட்டமாகவும், வடக்கு

(10ம் பக்கம் பார்க்க)



ஈ.பி.டி.பி யின் யாழ் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக ஈ.பி.டி.பியை வெளியேறக்கோரி ஆர்ப்பாட்டம் செய்வதையும், கலகம் அடக்கும் பொலிஸார் தயார் நிலையில் நிற்பதையும் படங்களில் காணலாம். **செய்தி 2ம் பக்கத்தில்**

படம்: வே. தவச்செல்வன்

# திருமலை மாவட்ட பாதுகாப்பு உபகுழு நேற்றுக் கூடியது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அரச தரப்புப் பிரதிநிதி களும், விடுதலைப்புலிகள் தரப்பு. பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எதுவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை என்றும், தொடரும் பேச் சுக்களின் போது எதிர்பார்க்கப்படும் முடிவுகளை எட்டலாம் என்று தாம்நம்புவதாகவும் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக நேற்று திருகோணமலையில் முதலாவது பாதுகாப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது.

(10ம் பக்கம் பார்க்க)

# நெடுந்தீவுக்கு உணவுப் பொருள் இன்று எடுத்துக் செல்லப்படும்

## யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதி மக்களுக்கு வழங்குவதற்காக இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து உணவுப் பொருட்கள் நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப் படவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தாம் சேகரித்த உணவுப் பொருட்களை இன்று காலை விசேட படகில் நெடுந்தீவுக்கு எடுத்துச் சென்று அங்குள்ள மக்களுக்கு வழங்கவுள்ளனர்.

ஈ.பி.டி.பியினருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நெடுந்தீவு மக்கள் உணவுப் பற்றாக்குறை நெருக்

(10ம் பக்கம் பார்க்க)

# நாகர் கோவில் வீதி குறித்து நேற்று அரசு - புலிகள் சந்திப்பு

## இணக்கப்பாடு எட்டப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் - பருத்தித்துறை வீதியை மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடுவது குறித்து அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை ஒன்று நேற்று யாழ் யுத்தநிறுத்தக் கடற்கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ் யுத்த நிறுத்தக் கடற்கண் காணிப்புக்குழுத் தலைவர் பியர் சென் ஆர்பிக் தலைமையில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின் போது விடுதலைப்புலிகளின் சார்பில் வடமுனைக் கட்டளையகத்தைச்

(10ம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் உரை ரூபவாஹினியில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளது.

தற்போது நாட்டில் சமாதானம் நிலவுவதால் விடுதலைப்புலிகளின் தலைவரின் உரையை ரூபவாஹினியில் ஒளிபரப்புவது தமது கடமை என்றும், நேயர்கள் அதனைப் பார்க்க

(10ம் பக்கம் பார்க்க)

## களுத்துறைச் சிறைக்கு அமைச்சர் மிலிந்த விஜயம்

(கொழும்பு)

களுத்துறைச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று நேரில் சென்று பார்வையிட்டதுடன் தமிழ்க் கைதிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் பிரதமரின் சமாதான செயல

(10ம்பக்கம் பார்க்க)

வாசகர்களே:-
இன்று
வலம்புரியின்
வாரமலர்
சங்கு நாதம்
விலை ரூபா 12/-

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசாங்க அறிவித்தல்

## அரசினர் பொது வைத்தியசாலை யாழ்ப்பாணம்

## 2003ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும்பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் நிறுவனங்களும் மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விண்ணப்பிக்கலாம்

01) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
02) கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள்
03) கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
04) பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்
05) ''சமுர்த்தி'' முகாமையாளர்கள்
06) உரிய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட கமக்காரர் ஸ்தாபனங்கள்

### அ பொருள்கள்

அ) 01. காகிதாதிகள், எழுதுபொருட்கள்
அ) 02 ஈர்க்கில் தடி, துயபுத்தடி, பாய்
அ) 03. பாவனைப் பொருள் )சவர்க்காரம், தீப்பெட்டி, விம், காப்பிக், சவர் அலகு முதலியன)
அ) 04. மரத்தளபாடங்கள் வைத்தியசாலைப் பாவனைக்குரியவை கட்டில்கள் மேசைகள் கதிரைசள் வாங்குகள் முதலியன)
அ) 05. துணிவகைகள்- வைத்தியசாலைப் பாவனைக்குரியவை(சீருடைத்துணி, கோடிட்ட துணி, படுக்கை விரிப்பு, துவாய் முதலியன)
அ) 06. உருக்குத்தளபாடங்கள் - வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (அலுமாரிகள், கட்டில்கள், சேலைன்நிலைகள் முதலியன)
அ) 07. கட்டடப் பொருள்கள்(சீமெந்து, பெயின்ற் ஆணிகள், கல், மணல் முதலியன)
அ) 08. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்- (டயர், ரியூப், பற்றறிகள் முதலியன)
அ) 09. அரிந்த பனைமரங்கள் சலாகைகள் அரிந்த ஏனையமரங்கள் (நிலைகள், யன்னல்கள் கதவுகள், உள்சீற் பொருத்துவதற்குரிய மரங்கள் முதலியன)
அ) 10. நீர்வழங்கு பொருட்கள் - (பிவீசிகுழாய்கள் முதலியன)
அ) 11. ஏனைய பாவனைப் பொருள்கள் - (பிளாஸ்ரிக் வாளி குப்பைக்கூடை, சுவர் மணிகூடு முதலியன)
அ) 12. இரும்பு, பித்தளை, கனஇரும்புப்பொருள்- (பூட்டுக்கள், வாளி, மண்வெட்டி முதலியன)
அ) 13. சப்பாத்துக்கள், இறப்பர் செருப்புகள்
அ) 14. றெக்சின், பொலித்தின் வகைகள்
அ) 15. மின்சார உபகரணங்கள், மின்சாரஉதிரிப் பாகங்கள் வயர், மின்குமிழ்கள் கோல்டர் பிளக் முதலியன
அ) 16 இறப்பர் முத்திரைகள்
அ) 17. மருந்து வகைகள்
அ) 18. மெத்தைகள் (சியெஸ்டா), தலையணைகள், நுளம்பு வலைகள் முதலியன
அ) 19. அலுமினியப் பாத்திரங்கள்:- (சமையலறைக்குரிய பெரியபாத்திரங்கள் உட்பட)

### ஆ, சேவைகள்

ஆ) 1. உருக்கு தளபாடக் திருத்தம்
ஆ) 2. மரத்தளபாடத் திருத்தம்
ஆ) 3. மின்சார இயந்திர, மின்சார உபகரணத் திருத்தம் (குளிர் சாதனப் பெட்டிகள தொற்று நீக்கி இயந்திரம், எக்ஸ்கதிர் இயந்திரம், மோட்டார்கள், மின்பிறப்பாக்கிகள் உயர் வைத்திய உபகரணம் உட்பட)
ஆ) 4. கட்டடத் திருத்தம்
ஆ) 5. அச்சுவேலைகள் (படிவங்கள் முதலியன)
ஆ) 6. நீர் இறைக்கும் இயந்திரம், கழிவு அகற்றும் இயந்திரம் திருத்தம்.
ஆ) 7. நீர் விநியோகம், மலசலகூட வடிகால் திருத்தம்.
ஆ) 8. போக்குவரத்துச் சேவை (பொருள்கள் ஏற்றி இறக்கல்)
ஆ) 9 மோட்டார் வாகனத்திருத்தம்.
ஆ) 10. மோட்டார் வாகன சேவிஸ்
ஆ) 11. தட்டச்சு இயந்திரம், பிரதி எடுக்கும் இயந்திரம் (றோனியோ) நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி, கணனி இயந்திரம்முதலியன(சேவிஸ் உட்பட)திருத்தம்
ஆ) 12. அடையாள அட்டைகள் (புகைப்படம் எடுத்துத் தயாரித்து வழங்குதல்)
ஆ) 13. மோட்டார் மீள முறுகுதல்.
ஆ) 14. தையல் வேலைகள்.

மேற்படி சேவைகளுக்காகப் பதிவுசெய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தை எனது பணிமனையில் ரூபா 100/- பதிவு கட்டணமாகச் செலுத்திப் பெற்று 2002-12-26ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வைத்திய கலாநிதி
**திரு. எஸ். சதுர்முகம்**
பணிப்பாளர்
அரசினர் பொது வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

(5287)

# ஈ.பி.டி.பியை வெளியேறக்கோரி நேற்று

# ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக மறியற்போர்

(தென்மராட்சி)

குடாநாட்டில் இருந்து ஈ பி டி பியினரை வெளியேறுமாறு கோரி யாழ் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியும் மறியல் போராட்டமும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது நேற்றைய தினம் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அலுவலகம் முன்பாக நடைபெற்றது.

இப்பேரணி நல்லூரில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக வந்து ஸ்ரான்லி வீதியை அடைந்து ஈ.பி.டி.பி அலுவலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டது.

சுமார் இரு மணித்தியாலங்களாக இடம்பெற்ற இம் மறியல் போராட்டத்தில் பங்குகொண்ட நூற்றுக்கணக்கான மக்கள் ஈ பி டி.பியினரை குடாநாட்டில் இருந்து வெளியேறுமாறு கோஷம் எழுப்பினர். அத்துடன் ஒலிபெருக்கி மூலமும் தமது கோரிக்கையை வெளிப்படுத்தினர்.

அதேசமயம் ஈ.பி.டி.பி அலுவலகம் முன்பாக நூற்றுக்கணக்கான கலகம் அடக்கும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் குண்டாந்தடிகள், கலகம் அடக்கும் கவசம் மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகள் சகிதம் காணப்பட்டன.

மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் இரு மணிநேர போராட்டத்தின் பின்னர் அங்கிருந்து அமைதியாகக் கலைந்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நெடுந்தீவில் நேற்றுமுதல் ஈ பி டி பியை வெளியேறக் கோரி உண்ணா விரதப்போராட்டம் ஆரம்பமாகியிருப்பது தெரிந்ததே. (உ-77)

# மீளளிப்புப் பெறுவோர் திருத்திய

## பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புப்பட்டியலில் இடம் பெற்ற பெயர்களில் ஏற்பட்ட பிழைகள் திருத்தம்செய்யப்பட்ட பட்டிய நிதித்துறையினரால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது அதன்விபரம் வருமாறு.

08 11.2002

**உடுவில்**

யா-உ-2806 சாந்தகுமாரி கருணசேனா

**யாழ்ப்பாணம்**

யா-யா-537 தியாகராசா திருநாவுக்கரசு, யா-யா-3142 றோஸ்மலர் அமலநேசன்.

09 11 2002

**சங்கானை**

யா-ச-14 தம்பையா சோமஸ்கந்தசாமி இரா்சேந்திரம், யா-ச-60 கனகர் பாலசிங்கம், யா-ச-761 சர்வேஸ்வரி பாலச்சந்திரன், யா-ச 2960 மனோரஞ்சிதமலர் இராசவல்லவன்.

**கோப்பாய்**

யா-கோ-1785 வசந்தாரமணி சச்சிதானந்தம், யா-கோ-2625 வைத்திபலிங்கம் கமலநாதன். யா-கோ 4877 போகராணி பாலேந்திரா யா-கோ-5871 சேனாதிராசா தர்மலிங்கம்.

10 11 2002

**நல்லூர்**

யா-ந-53 சத்தியவதி சேனாதிராஜா, யா-ந- 1014 புவனேஸ்வரி தங்கராஜா, யா-ந-3133 மகேந்திரராணி இராஜரட்ணம், யா-ந-4656 ஜெகசீதா இரத்தினம், யா-ந-5334 கணபதிப்பிள்ளை சிவகுமரன்.

**காரைநகர்**

யா-கா-664 பரமேஸ்வரி வாமதேவன்.

**தெல்லிப்பளை**

யா-தெ-888 சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு, யா-தெ-1428 அம்பலவாணர் சின்னத்தம்பி, யா-தெ-2540 செம்பாப்போடி வயந்தராசராச பிள்ளை, யா-தெ-3135 மங்கையற்கரசி கனகரத்தினம்.

**கரவெட்டி**

யாழ்-க-934 சரஸ்வதி இரத்தினசிங்கம், யாழ்-க4563 சோதீஸ்வரி செல்வராஜன்

**வேலணை**

யா-வே-576 குணநந்தம்மா மாட்டீன், யா-வே-833 பங்கையாசினி மாணிக்கம்

11-11-2002

**மானிப்பாய்**

யாழ்-மா-100 கணேசரத்தினசிங்கம் இராசகாரியர், யாழ்-மா-1124 சறோஜினி தனபாலசுதந்திரன்

**வேலணை**

யாழ்-வே-1399 கிருஸ்ணாம்பாள தவவிநாயகம், யாழ்-வே 2069- இராசம்மா சுந்தரமூர்த்தி, யாழ்-வே-2099-புவனேஸ்வரி சோமசுந்தரம் யாழ்-வே-2421 பசுபதிப்பிள்ளை கனகலிங்கம், யா-வே-2697 மேரிஸ்ரெலாரஸ் லெஸ், யா-வே-2711 நகுலேஸ்வரி சாம்பசிவம்

12-11-2002

**சாவகச்சேரி**

யா-சா-593ஜெயந்தினி அரியஜெயம், யா-சா-2015குமா-ரகுலசிங்கம் குணராசா, யா-சா4984 ரசிகலா சின்னராசா

**பருத்தித்துறை**

யா-பரு-304 கிருஸ்ணசாமி அருளானந்தன், யா-பரு-420 ஜெயந்தினி ஜெயபாலன் யா-பரு-1779 கேதாரேஸ்வரி தருமரத்தினஐயர்

**வெளியகழ்வு**

யா-வெ-1781 பத்மநாதன் நடனசிவன், யா-வெ-248 செல்லையா மகாதேவா யா-வெ-253 மங்களம் இராஜன், யா-வெ-277 சுப்பையா குனபாலசிங்கம். யா-வெ-727சிவகலாபாமினி வைத்தியலிங்கம், யா-வெ-852தில்லையம்பலம் ஜெகதீசன்

# அரசியல் பணிமனை நேற்று நயினையில் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பணிமனையொன்று நேற்று நயினாதீவில் திறந்துவைக்கப்பட்டது.

ஆசிரியர் ஜீவசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பொதுச்சுடரை நயினாதீவுப் பிரதேசப்பொறுப்பாளர் இன்பன் அ.சண்முகநாதன் ஆகியோர்ஏற்றி வைக்க தேசியக்கொடியை தீவக பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார் பெயர்பலகையை கனகலிங்கம் திரைநீக்கம் செய்ய பணிமனையை மாவீரர் சேதுவின் தந்தை லோகநாதன் திறந்து வைத்தார். (ந)

**இந்தியாவை**

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சீவன் போகும் என்ற நிலையில் இந்தியாவின் நிலை இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-10)

# சங்கே முழங்கு

## நவாலி விவசாய சம்மேளனத்தின் விளக்கம்

நவாலி விவசாய சம்மேளனம் தொடர்பாக நவாலி விவசாயிகள் அரசஅதிபருக்கு முறையிட்டுள்ளதுபற்றி வலம்புரியில் வெளிவந்தசெய்திக்கு சம்மேளனத்தின் தலைவர் வே.சிற்றம்பலம், செயலாளர் சி.மகேந்திரன் ஆகியோர் கூட்டாக விளக்கக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேசசெயலரின் தலைமையில்நடைபெற்ற மேற்படி சம்மேளனத்தின் கூட்டத்தில் செய்தி குறித்து ஆராயப்பட்டதன் பிரகாரம் விவசாயிகளுக்கான உரமானியப் படிவங்கள் தலைவர், செயலாளர் பொருளாளர் மூலம் சகலபிரிவு விவசாயிகளுக்கும் கிடைக்கும்படி விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை 07.07-2002இல் நடைபெற்ற சம்மேளனத்தின் கூட்டத்தில் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தலா இரண்டு பேர் தெரிவுசெய்யப்பட்டனர் கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும்போது அதுபற்றிய தகவல் செயலாளருக்குத் தெரியப்படுத்தப்படும் அதேபோல பயிரழிவை மதிப்பீடு செய்வதற்கு உபகுழுவொன்றும் அமைக்கப்பட்டது. உபகுழுவால் மதிப்பீடு செய்யப்படும் இழப்பீட்டுத் தொகை உரியவரினால் செயலாளர், தலைவர் ஊடாக பொருளாளரிடம் வழங்கப்பட்டு அதற்கானபற்றுச்சீட்டு இழப்பீட்டுத்தொகையை செலுத்தியவருக்கு வழங்கப்படும்.

இதேபோல் உரியஇழப்பீட்டுத் தொகை பாதிக்கப்பட்ட விவசாயிக்கு வழங்கப்படும். இதுவே சம்மேளனத்தின் நடைமுறையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

\- நவாலி விவசாய சம்மேளனம்.

# சமாதானத்திற்காக எவ்வகையான சவால்களையும் எதிர்கொள்வேன்

## பிரதமர் ரணில் உறுதிப்பாடு

(கொழும்பு)

நாட்டின் இளம் சமுதாயத்திற்கு நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்கும் பொருட்டு அரசாங்கம் எவ்வகையான சவால்களையும் எதிர்கொள்ளத் தயார் என்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள தனியார்கல்விநிறுவனமொன்றின் 40 வது ஆண்டுநிறைவு விழாவில் நேற்று முன்தினம்கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; 21 ஆம் நூற்றாண்டில்தகவல் தொழில்நுட்பமும் தொழில் நுட்பமும் முக்கிய பங்குவகிக்கின்றன. இதனால் இளம்சமுதாயத்தினர் இத்துறைகளில் தமதுஅறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்கில் கஷ்டமான பாதையில் தற்போது பயணம் செய்து வருகிறோம்.

இந்தப் பயணம் வெற்றியளித்து அதன் மூலம் சமாதானம் உருவாகும் என்ற பூரண எதிர்பார்ப்பு எமக்கு உண்டு என்றார்.

இந்நிகழ்வில் விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறையமைச்சர் மிலிந்த மொறகொடஉட்பட பலர்கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-4)

## ஆரம்ப சுகாதார நிலையம் இயங்க முடியாத நிலை

(ஆனைக்கோட்டை)

சாவல்கட்டு கிராம ஆரம்ப சுகாதார நிலையம் இயங்க முடியாத நிலையில் உள்ளது.

பெய்துவரும் பெருமழை காரணமாக மேற்படி நிலையத்தைச் சூழ வெள்ளம் காணப்படுவதனாலேயே அதன் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதனால் கர்ப்பிணித்தாய்மார் மற்றும் குழந்தைகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-201)

பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய

## பாதாள உலக உறுப்பினர் பொலிஸாரிடம் சிக்கினார்

(கொழும்பு)

பல குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்டதாக கருதப்படும் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த நபர் ஒருவரை நேற்று முன்தினம் கொழும்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் மீது ஏற்கனவே நீதிமன்றத்தினால் பல பிடி விறாந்துகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும்,

கொலைகள் உட்பட பல குற்றங்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மத்திய பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி வி. ஆர். திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (உ-4)

## மின்சாரம் குடிநீர் வசதி ஏற்படுத்துக

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் மீளக்குடியமர்ந்து வரும் பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதிக்கு மின்சாரவசதி மற்றும் குடிநீர் வசதி என்பவற்றை ஏற்படுத்துமாறு, கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும் பெருமான் விநாயகர் தேவஸ்தான இந்து இளைஞர் மன்றம் சம்பந்தப்பட்ட தரப்புகளைக் கோரியுள்ளது. (உ)

## காலி மோதலுக்குக் காரணம் சிங்கள-முஸ்லிம் இன முரண்பாடல்ல

(காலி)

காலி நகரில் இடம்பெற்றுள்ள மோதல்கள், இனப்பூசல் காரணமாக ஏற்பட்டவை அல்ல என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, முச்சக்கர வண்டி சாரதிகள் மூவருக்கு இடையே ஏற்பட்ட தகராறே இம் மோதலிற்குக் காரணம் என சி ஐ டி குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் நிலையம் அதன் கடமையை சரிவர நிறைவேற்றவில்லை என்றும் சி ஐ டி. வெளியிட்ட அறிக்கையில சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, காலியில் நடைபெற்ற மோதல் குறித்து விசாரணை செய்வதற்கு என பொலிஸ் மா அதிபர் ரி. ஆனந்தராஜா விசேட சி. ஐ. டிக் குழுவை அனுப்பியிருந்தமை தெரிந்ததே. (உ-10)

## மோதலைத் தவிர்க்க இணக்கம்

புத்தளம் மதுரங்குளிப் பகுதியில் இரு இனங்களிற்கு இடையே இடம்பெற்றுவரும் மோதலை தவிர்த்துக் கொள்ளவும் அப்பகுதியில் இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்கும் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

இக்கூட்டம் புத்தளம் பகுதி பிரதேச செயலகத்தில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தலைமையில் நடைபெற்றது.

வடமேல் மாகாண ஆளுநர் சிறீபாலஜெவீர உட்பட மாகாண அமைச்சர்களும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (உ-10)

## போஷாக்கு செயற்றிட்ட கருத்தரங்கு

(சுதுமலை)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கல்வளைக் கிராமத்தில் செயற்படுத்த உள்ள போஷாக்கு செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 00 மணிக்கு சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையில் டாக்டர் கே. கணேஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சண்டிலிப்பாய் சமநல சேவை அலுவலகத்தின் விவசாயப் பெரும்பாக உத்தியோகத்தர் பயனுள்ள முறையில் வீட்டுத்தோட்டம் அமைத்தல் தொடர்பாகவும் அதைப்பராமரித்தல் தொடர்பாகவும் விளக்கமளிக்கவுள்ளார். இக்கலந்துரையாடலில் சுகாதாரத்திணைக்கள அதிகாரிகள், கோட்டக்கல்வியதிகாரி மற்றும் பிரதேச செயலக உயரதிகாரிகள் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மேற்பார்வை குடும்பநல சேவை உத்தியோகத்தர் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இப்போஷாக்குத் திட்டத்திற்கு வறுமை நிலையில் உள்ள போஷாக்கு குறைந்த 50 குடும்பங்கள் ஏற்கனவே சுகாதார உத்தியோகத்தர்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-252)

## ஈ - லங்கா நிகழ்ச்சித்திட்டம் பிரதமர் ஆரம்பித்துவைத்தார்

(கொழும்பு)

இலங்கையில் தகவல் தொழில் நுட்பத்துறை ஈ-லங்கா நிழ்ச்சித் திட்டத்தினை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இது தொடர்பாக பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட கருத்து வெளியிடுகையில்;

இத் திட்டம், மனிதவள அபிவிருத்தி தேசிய தகவல் கட்டமைப்பை உருவாக்குதல், மற்றும் ஈ-அரசாங்க அமைப்பொன்றை ஏற்படுத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

தகவல் தொழில் நுட்பம் தொடர்பான வசதிகளை அதிகரிப்பதும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும் என்றார்.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவிருக்கும் இலத்திரனியல் தகவல் நிலையம் நவீன தொழில்நுட்ப அறிவை நாடு பெற்றுக்கொள்ள உதவும் வகையில் அமையும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

## பனையால் விழுந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பனையில் ஏறும் போது தவறுதலாக விழுந்த நபர் படுகாயமடைந்துயாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பனையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவராசா (வயது 33) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ந-7)

## 2 இலட்சத்து 20ஆயிரத்து 762 பேர் வடக்கு - கிழக்கில் மீள் குடியேற்றம்

### அமைச்சர்ஜயலத் அறிக்கை

(கொழும்பு)

யுத்தத்தின் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரில் சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரத்து 762 பேர் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் செப்டம்பர் வரையிலான காலப் பகுதியில் தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியேறியுள்ளனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இது உறுதி செய்யப்பட்டதாக புனர்வாழ்வு அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான விபரங்களை இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தி வருவதாகவும் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

## தமிழ்ச் சேவைப் பணிப்பாளரை நியமிக்க பிரதமர் ரணில் இணக்கம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவைப் பணிப்பாளரிற்கான பதவி வெற்றிடத்தை உடனடியாக நிரப்புவதற்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா இணக்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன் பிரதமரைச் சந்தித்து கேட்டுகொண்டதற்கு அமையவே இவ்வாறு இணக்கம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு தமிழர்களையே நியமிக்க வேண்டும் என ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார் என்றும் அதற்கும் பிரதமர் இணக்கம் தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## நோர்வே வர்த்தக பிரதிநிதி இவ்வார இறுதியில் இலங்கை விஜயம்

(கொழும்பு)

நோர்வேயின் வர்த்தக தொழில் துறை சம்மேளத்தின் பிரதிநிதிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி இலங்கைவரவுள்ளனர்.

மூன்றுநாள்விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைவரவுள்ள இவர்கள், இலங்கை முதலாளிமார் சம்மேளனம், வர்த்தகசபைகள் ஆகியவற்றின் முக்கியஸ்தர்களை சந்தித்து பேசவுள்ளனர்.

வளர்முகநாடுகளில் உள்ள வர்த்தக நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தைகளைநடத்துவதும், ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதுமே இவர்களின் வருகைக்கான நோக்கமாகும்.

இவர்கள், அமைச்சர்களான மகிந்தசமரசிங்க, ரவிகருணாநாயக்கா ஆகியோரையும்சந்தித்து பேசவுள்ளனர். (உ-8)

## இலங்கை - அமெரிக்க விமானப் போக்குவரத்து உடன்படிக்கை அமுல்

(கொழும்பு)

இலங்கைக்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான விமானப் போக்குவரத்து உடன்படிக்கைகடந்ததிங்கட்கிழமை தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளது.

இரண்டு நாடுகளும் இந்தவருடம் யூன் மாதம் 11ஆம் திகதி இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமை தெரிந்ததே.

இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் அமெரிக்காவுடன் கைச்சாத்திட்ட முதலாவது உடன்படிக்கை இதுவாகும் என்று வெளிநாட்டு அமைச்சு உறுதி செய்துள்ளது.

விமானப் பிராந்தியம்

(8-ம் பக்கம் பார்க்க)

# ஈராக் மீது போர் தொடுக்க 15ஆயிரம் துருப்புக்களை அனுப்புக

## பிரிட்டனுக்கு அமெரிக்கா வேண்டுகோள்

(லண்டன்)

ஈராக்குடன் போர் தொடுப்பதற்கு 15000 பிரிட்டிஷ் துருப்புக்களை அனுப்புமாறு முறையான வேண்டுகோள் ஒன்றை பிரிட்டிஷ் அரசுக்கு அமெரிக்கா விடுத்துள்ளது.

இருப்பினும் இந்த வேண்டுகோளை தொடர்பாக இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஈராக் தற்போது ஆயுதப் பரிசோதகர்களுக்கு முழு ஒத்துழைப்பும் வழங்க முன்வந்துள்ளது. எனினும் இந்த ஒத்துழைப்பு வாபஸ் பெறப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் ஈராக்குடன் அமெரிக்கா போர் தொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகக காணப்படுகின்றன.

இதேவேளை பிரிட்டினில் கடந்த சில வாரங்களாக தீயணைக்கும் படையினர் சம்பள உயர்வு கோரி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

இந்தவேலை நிறுத்தப் போராட்டம பிரிட்டிஷ அரசுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தீயணைக்கும் பிரிவினர்களது பணியை பிரிட்டிஷ துருப்புக்களே மேற்கொண்டு வருகின்றன. இதன் காரணமாக அமெரிக்காவின் வேண்டுகோளை நிறைவேறறுவது குறித்து எந்த முடிவும் எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை அமைதியான முறையிலேயே ஈராக் விடயம் குறித்து முடிவு எடுக்கப்பட வேண்டும். அதுவரை ஐக்கிய நாடுகள் அமைப்பிலுள்ள நாடுகள் அனைத்தும் ஈராக்கின் ஆயுதக்களைவு விடயம் குறித்து மன வுறுதியுடன் இருக்கவேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள் விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

# பாகிஸ்தானில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் கடுமையாகிறது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பயங்கரவாதத்திற்கெதிரான சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எந்தவித குற்றச்செயல்களும் சுமத்தப்படாமல் சந்தேக நபர் ஒருவரை ஒருவருட காலம்வரை தடுப்புக் காவலில் வைப்பதற்குப் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கும் வகையில் இராணுவ அரசு இந்த திருத்தங்களைச் செய்துள்ளது.

முன்னைய சட்டத்தின் பிரகாரம் குற்றம் சுமத்தப்படாத சந்தேக நபர் ஒருவரை ஒரு மாதம் மட்டுமே தடுப்புக் காவலில் வைத்திருக்க முடியும் என்று சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்திற் கெதிரான சட்டம திருத்தப்பட்டதன் மூலம் சந்தேக நபர்களின் சொத்து மற்றும் வங்கிக் கணக்குகள் பற்றிய விபரங்களை ஆராய்வதற்கும் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மனித உரிமை அமைப்பினரும், வலதுசாரி அரசியல்வாதிகளும் இச்சட்டத்திருத்தத்தை கடுமையாக விமர்சித்துள்ளார். இந்த சட்டம் ஏற்றுக் கொளளக்கூடியதல்ல என்றும் நியாயத்திற்குப் புறம்பானது என்றும் அவர்கள தெரிவித்துள்ளனர். (பி-4)

# கடன் பட்டுக் கேக் வாங்கிய கோடீஸ்வரி மடோனா

(லண்டன்)

உலகப்புகழ் பெற்ற பொப்இசைப் பாடகியும் கோடீஸ்வரியுமான மடோனா தனது மகனுக்கு கேக் வாங்குவதற்கு இன்னொரு பெண்மணியிடம கடன் பெற்றுள்ளார்.

நேற்று பிரிட்டிஷின் உணவு விடுதி ஒன்றில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவர் தனது பணப்பையினை அங்கு கொண்டு செல்ல மறந்ததாலேயே இந்த நிலைக்கு ஆளாகிவிட்டதாக தனது சகோதரிகளிடம் கூறியுளளார்.

உலகப் புகழ் பெற்ற பொப் இசைப் பாடகியான மடோனா தனது கணவரான பிரபல திரைப்பட இயக்குநரான ஹக்ரிஜ் மற்றும் பிள்ளைகளுடன் பிரிட்டனில் உள்ள மிகப் பெரிய உணவு விடுதி ஒன்றிற்கு சென்றிருந்தார்.



மடோனா ... வின் மகன் அங்கி ... ருந்த கேக் ஒன்றை விரும்பிக கேட்டதால் அதனை வாங்க முனைந்த வேளை அவரிடம் பணப்பை இருக்கவில்லை.

இதனால், தன்னருகே நின்றிருந்த பெண்மணியிடம் இரண்டு ஸ்ரேலிங் பவுண்களைக் கடனாகப் பெற்று மகனுக்கு கேக்கினை வாங்கிக் கொடுத்துள்ளார்.

இதேவேளை, கடன் கொடுத்த பெண்மணி யாரென அறிந்திருக்க வில்லையென றோய்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மடோனா பின்னர் அந்தப் பெண் மணிக்கு தனது பாடல்கள் அடங்கிய சி.டி ஒன்றையும் கடன் தொகையை காசோலையாகவும் அனுப்பி வைத்துள்ளார்.


பிரித்தானியாவில் ஆகக் கூடிய வருமானமாக 36மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை மாதாந்தம் வருமானமாகக் கொள்ளும் இசைக் கலைஞா மடோனா என்பதும் குறிப்பிடத் தக்கது. (உ-2)

# வை.கோ. கைதைக் கண்டித்து பேரணி நடத்த முடிவு

(புதுடில்லி)

வை. கோபலசாமி கைது செய்யப் பட்டதைக்கண்டித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேரணி ஒன்றை நடத்தப் போவதாக நேற்று அறிவித்துள்ளனர்.


இவர்களது பேரணி சென்னை ஆளந்தூரில் ஆரம்பித்து பூந்த மல்லியில் நிறைவு பெறும் எனவும், இதில் மறுமலர்ச்சி திராவிடக் கழகத்தின் அனைத்துத் தலைவர்களும் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.



இதேவேளை, பொடோ சட்டத்தின் ஒரு பிரிவான பேச்சுரிமையைக் கட்டுப் படுத்தும் சட்டத்தின் கீழ் கடந்த மூன்று மாதங்களிற்கு முன் வை. கோபலசாமி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# பிரபல்ய நபர்கள் பட்டியலில் அமெ. அதிபர் புஷ் - எதிரி பின்லேடன்

(நியூஜோர்க்)



அமெரிக்காவில் இருந்து வெளிவரும் "ரைம்ஸ்" சஞ்சிகை 2002 ஆம்ஆண்டின் பிரபல்யமான நபா்களின் பட்டியலை எதிர்வரும் டிசம்பர் மாதம் 23ஆம் திகதி வெளியிடவுள்ளது.

இப்பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் சர்வ தேசத்தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் ஆகியோர் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

75வருடகால வரலாற்றில் இம்முறை ரைம்ஸ் சஞ்சிகை வல்லவர்களையும் உலகை அதிர வைததவர்களையும் பிரபல்யமான நபர்களில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப உட்பட பல முக்கிய பிரமுகாகளின் பெயர்களும் இப்பட்டிய லில் வெளியிடப்படவுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-4)



# பிரி. அரச குடும்பத்தின் செல்வாக்குக் குறைகின்றது

(லண்டன்)

பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் மறைவிற்குப் பின் அந்நாடு மிக மோசமான விமர்சனங்களுககுள்ளாகி இருப்பதாக கருத்துக் கணிப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்நாட்டு அரச குடும்பத்துககும் அத்தகைய நிலை ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளதுடன் அரச குடும்பத்திற்கு மக்கள் மத்தியில் இருந்து வந்த செல்வாக்கும் குறைந்துள்ளதாகக் கருதப்படுகின்றது.

மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பொன்று நடத்தப்பட்டதன் மூலம் இதனைக் கண்டறிந்ததாக ஆய்வாளர்கள்தெரிவித்தனர்.

கடந்த 15 வருடங்களின் பின் அரச செல்வாக்கு குறைவடைந்து வருவது இதுவே முதற் தடவையாகும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (பி-4)

# அல்கெய்டாவுடன் தொடர்பாம் 100 சவுதிப் பிரஜைகள் கைது

(ரியாத்)

அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப் படும் 100சவுதிப் பிரஜைகளை அந் நாட்டுப் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாக உள்விவகார அமைச்சர் இளவரசர் நைவ் விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஆப்கானிஸ் தானில் இருந்து சவுதிக்குத்திரும்பி வந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலையடுத்து கைது செய்யப்பட்டவா்கள் தொடர்பாக சவுதி அரசாங்கம் வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாகத் தேடப்பட்டுவந்த 19சந்தேக நபர்களில் 15பேர் சவுதிப் பிரஜைகள் என்பதும் இங்கு நோக்கத் தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை சவுதியில் 800இற்கும் மேற்பட்ட டோர் விசாரிக்கப்பட்டதாகவும் உள் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-4)

# மின்சாரக் கோபுரம் குண்டுவைத்துத் தகர்ப்பு

## தணிந்த பதற்றம் மீண்டும் தலை தூக்கியது

(புதுடில்லி)

காவிரி நீர்ப் பிரச்சினை சற்றுத் தணிவடைந்துள்ள நிலையில் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் பெரிய மின்சாரக்கோபுரம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டமையானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி மின்சாரக் கோபுரமானது தமிழகத்திலுள்ள நெய்வேலியில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று இடம்பெற்ற இத்தாக்குதலை தமிழ்த்தீவிரவாத அமைப்பினரே நடத்தியதாக இந்தியப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், மேற்படி மாநிலங்களுக்கான மின் விநியோகம் தற்போது சீராக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-4)


வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்

## 2003ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

**2002-11-02 ம் திகதி வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் ஆகியவற்றை 2003-01-01 தொடக்கம் 2003-12-31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.**

அட்டவணை

| குத்தகை விபரம் | மாத வாடகை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை (வற்வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|
| **01. சுன்னாகம் உபஅலுவலகம்** | | | | |
| 1. உடுவில் கிளிச்சந்தை | - - | 150/- | 1500/- | 68250/- |
| 2. உடுவில் ஆலடிச்சந்தை | - - | 150/- | 500/- | 5000/- |
| 3. கருவாட்டுக்கடை இல:3 | 60/- | 50/- | 100/- | 11000/- |
| 4. கருவாட்டுக்கடை இல:5 | 60/- | 50/- | 100/- | 13000/- |
| 5. கருவாட்டுக்கடை இல:6 | 60/- | 50/- | 100/- | 5550/- |
| 6. கருவாட்டுக்கடை இல:7 | 60/- | 50/- | 100/- | 8925/- |
| **02. உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1. இணுவில் ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 1500/- | 31600/- |
| 2. தாவடி ஆட்டிறைச்சிக்கடை | -- | 150/- | 1500/- | 40000/- |
| 3. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக்கடை | -- | 150/- | 1500/- | 56000/- |
| **03. ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1. ஏழாலை சந்தை | -- | 250/- | 1000/- | 12600/- |

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதித்திகதி :- 2002-11-27 பி.ப 2 மணி
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2002-11-28 பி.ப 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 2002-11-28 பி.ப 3 மணி

க.கமலசேகரன், ஜே.பி.யு.எம்,
தலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்

*வலி. தெற்கு பிரதேச சபை*
*சுன்னாகம்*
2002.11.20

(C/5263)

# இன்று ஒரு தகவல்

## பூமிக்கு வெளிச்சம்

இரவைப் பகலாக்க 'முடியுமா?' இது ஒருவருடைய கேள்வி ஏன்முடியாது? என்னால் முடியுமே!' இதுஇன்னொருவருடைய பதில், எப்படி முடியும்?' என்று கேட்கிறார் அவர் 'ஒருவிளக்கைக் கொளுத்தி வைத்தால் சரியாகப் போய்விடுகிறது' என்கிறார் இவர் பதில்சொன்னவரைக் கோபிப்பதில் பிரயோசனம் இல்லை! இவரிடம் போய் இந்தக் கேள்வியை அவர்கேட்டாரேபாருங்கள்... அவரைச் சொல்ல வேண்டும்.

இந்தக் கேள்விக்கு ஒருவிஞ்ஞானி பதில் சொல்கிறார். கிறிஸ்ரியன் மார்சல்என்றுஒரு பிரெஞ்சு விஞ்ஞானி. இரவைப் பகலாக்க முடியும் என்று சொல்கிறார் அவர். எப்படித் தெரியுமா? சந்திரன் இருக்கிறதல்லவா? அங்கே போய்க் கண்ணாடியைப் பதிக்க வேண்டுமாம்! சூரிய வெளிச்சம் அந்தக் கண்ணாடியில் பட்டுப் பிரதிபலிக்குமாம். அந்த வெளிச்சம்பூமிக்கு வந்து சேருமாம். இங்கு இரவு பகலாகிவிடுமாம். ஆச்சரியமாக வல்லவா இருக்கிறது?

ரோமில் 32 வது சர்வதேச வானவெளிப் பயணம் பற்றிய மாநாடு நடந்தது. அதில் கலந்து கொண்டபோது இந்த விஞ்ஞானி இதைச் சொன்னார். சரி! இதனால் நமக்கு என்ன செளகரியம்? இது தானே உங்கள் கேள்வி? அப்படிக் கேளுங்கள்சொல்கிறேன் பூமியில் தெருவிளக்குகள் தேவையில்லாமல் போய் விடும். இதற்கு ஆகின்ற செலவும் மிச்சம்- மின்சாரமும் மிச்சம். இப்போதுபலஇடங்களில் தெருவும் இருக்கும். விளக்கும் இருக்கும்,ஆனால்வெளிச்சம் இருக்காது.

சந்திரனில்கண்ணாடியைப் பதித்து, அங்கேயிருந்துஇங்கு கொண்டுவருகிற வெளிச்சம் கொஞ்சமாகத்தான் இருக்கும் என்றுநினைத்துவிடாதீர்கள். நாம் நன்றாக, துல்லியமாகப் பார்த்துப் படிக்கிற அளவுக்கு வெளிச்சத்தைக் கொண்டு வந்துவிட முடியுமாம். இன்னொரு சந்தேகம். பூமிக்கு வெளிச்சம் வருவதென்றால் நிலாவில் பதிப்பதற்கு எவ்வளவு கண்ணாடி தேவைப்படும்?

அவ்வளவு கண்ணாடிக்கு எங்கே போவது? என்று நினைப்பது தவறு ஏன்தெரியுமாசந்திரனில் ஒரு சதுர மீற்றர் அளவுள்ள கண்ணாடியை வைத்தால் பூமிக்கும் ஒரு சதுர மீற்றர் அளவுக்குத் தான் வெளிச்சம் வரும் என்று நினைக்கிறீர்களா? அப்படி இல்லை.

சந்திரனில் ஒரு சதுர மீற்றர் அளவுள்ள கண்ணாடியை வைத்தால்-அது பூமிக்குவந்து சேரும் போது,3200லிருந்து 3800 சதுர கிலோ மீற்றர் அளவுக்கு வெளிச்சம் கொடுக்கும். சும்மா சொல்லக் கூடாது.வருங்காலத்தில் இது நடை முறைக்கு வந்தாலும் வந்து விடும்.

இயற்கையாகவே இரவு நேரம் குறைவாக இருந்தால் இப்படி ஒரு முயற்சிக்கு அவசியமாக இருக்காது.வருஷத்துக்கு 365பகல்,365 இரவு இருக்கிறது. பகல்பாதி இரவு பாதி என்று இருப்பதை விட பகல் கால் பங்கு இரவு முக்கால் பங்கு என்று இருந்தாலும் ஒரு செளகரியம் இருக்கிறது நிறைய நேரம் தூங்கலாம்.

அது இருக்கட்டும். வருஷத்துக்கு இப்போது 365 நாள்கள் என்று சொல்கிறோம். ஒரு 360 வருஷத்துக்கு முன்னர் நாம் இங்கேயிருந்தால் உப்படிச்சொல்லமாட்டோம் இப்போதொல்லாம் வருஷத்துக்கு 480நாட்கள்இருந்தன. இப்போது ஏன் 365க்கு வந்துவிட்டது. அதற்கும் காரணம் இருக்கிறது. பூமிதன்னைத் தானே சுற்றிக் கொண்டிருப்பது நமக்குத் தெரியும். அப்படிச் சுற்றிக்கொண்டு வருகிற வேகம் வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. அப்படி வரும் போது வருஷத்துக்கு நாள் கணக்கும் குறைந்து கொண்டே வருகிறது.

இன்னும் பல மில்லியன் வருஷங்களுக்குப் பிறகு அது இன்னும் குறையலாம்.365 நாள்கள் என்பது 360 நாட்கள் என்றுஆகலாம் இதனைச் சோவியத் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள! பூமி சுற்றுகிற வேகம் அவ்வளவுசீக்கிரத்தில் குறைந்து போகாது அதற்கு வெகுகாலம் ஆகும்.

இப்படி இவ்வளவு வேகமாகப் பூமி சுற்றிக் கொண்டிருக்கிற பொழுதே நாம் எவ்வெவற்றையோ அனுப்பி இந்தப் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கப் பண்ணியிருக்கிறோம். நாமும் கண்டபடி சுற்றிக் கொண்டிருக்கிறோம். அவை இருக்கட்டும். பூமியில் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும் என்றால் நிலாவில் கண்ணாடியை பதிக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டோம். நிலாவில் கண்ணாடியைப் பதிப்பதற்கு நமது ஆட்களை அனுப்பினால் என்ன நடக்கும் தெரியுமா?

நிலாவில் சிறிதாக ஒரு கண்ணாடியைப் பதித்துவிட்டு அதற்குப் பக்கத்தில் பெரிதாக ஒரு கல்வெட்டையும் பதித்து விட்டு வந்து விடுவார்கள். இன்னார் இந்தத் தேதியில் இந்தக்கண்ணாடி பதிப்பு விழாவில் 'அடிக்கல்' நாட்டினார் என்று ஏதாவது அதில் எழுதியிருக்கும். அதன் பின்னர் கொஞ்ச நாளில் கண்ணாடி பதிப்பதற்கே இடம் இல்லாமல் போனாலும் போய்விடும். பூமிக்கு வெளிச்சம் கொடுக்கிறேன் என்று ஆரம்பித்து, அதனால் சந்திரனும் இருட்டுஆகிவிட்டதென்றால் அது மிகுந்த சங்கடம் இல்லையா?

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# மாவீரர் எழுச்சி நாட்களில் பயன்தரு மரங்கள் நாட்டத் திட்டம்

(மந்திகை)

சுமார் 6 வருடங்களின் பின்னர் வடமராட்சிப் பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வு எழுச்சி பூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு இப்பகுதியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் புனரமைக்கப் பட்டுள்ளதுடன் மாவீரர்களின் பெற்றோர்கள் ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன.

இவை தவிர தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் தமிழீழ பனைவள பகுதியும் இணைந்து மாவீரர்களின் இல்லங்களில் பயன்தரும் மரங்களை மாவீரர்களின் நினைவாக நாட்டும் நிகழ்வும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் சனசமூகநிலையங்கள் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில்பொதுஇடங்களிலும் மாவீரர் துயிலும் இல்லங்களிலும்பாடசாலைகளிலும்சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை மாவீரர் நாளையொட்டி வீதிகளில் சிவப்பு,மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளதுடன் மாவீரர்களின் தியாகங்களை சித்திரிக்கும் பாதாகைகளும் வீதிவளைவுகளும் கட்டப்பட்டுள்ளன. (உ-23)

## இராசி பலன்

22-11-2002
(கார்த்திகை 6, வெள்ளி)
அதியை மு ப 9.49 வரை
மிருகசீரிடம் மு.இ. 11 15 வரை
இராகுகாலம்- 10.40-12. 10
நல்ல நேரம்- 6.10- 7.40

**மேஷம்**
தடைப்பட்ட காரியம் கை கூடும்,செய்தொழில் விருத்தி, தெய்வதரிசனம், உறவினர் கலந்துரையாடல்.

**இடபம்**
மனக் கிலேசம், வாக்கு கலகம், பெண்கள் நட்பு, பொருள் விரயம்.

**மிதுனம்**
தெய்வசிந்தை, குடும்ப சுகம், முயற்சி பலிதம், பெரியோர் சந்திப்பு.

**கடகம்**
உணர்ச்சி வசப்படல், காரிய அலைச்சல், திடீர் நன்மை, நண்பாகள் ஒத்தாசை குறைவு.

**சிங்கம்**
பொருள்சேர்க்கை, நினைத்த காரியம் கை கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி,தெய்வ நம்பிக்கை.

**கன்னி**
கடுமையான முயற்சி, மேன்மையடைதல், நல்ல சம்பவம், தூரதேசச் செய்தி.

**துலாம்**
வயிற்றில் உபாதை, புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், திடீர் பயணம்.

**விருச்சிகம்**
உடல் சோர்வு, குடும்பத் தகராறு, காரிய தாமதம், போசன சுகம்.

**தனுசு**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தெய்வ தரிசனம், தனலாபம், நல்ல காரியம்.

**மகரம்**
தேக ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய அனுகூலம், தொழில் விருத்தி.

**கும்பம்**
குடும்பக் கவலை, நிலை மாற்றம், மனச் சஞ்சலம், முயற்சி தாமதம்.

**மீனம்**
தர்மம், பிரயாண சுகம், காரிய தாமதம், வியாபார முன்னேற்றம்.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது).

வளவன்

யாழ்-கொழும்பு விமானப் பயணிகளின்

# சிரமங்களைத் தவிர்க்க மாரப்பன நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- கொழும்பு இடையிலான விமானப் பயணத்திற்கு முன்பதாக பயணிகள் அனுபவிக்கும் சிரமங்களைத் தவிர்க்க விரைந்து நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உறுதியளித்துள்ளார்.

மேற்படி பயணிகள் தமது பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு அழைக்கப் பட்டு உடல் மற்றும் பொருட் பரிசோதனை செய்யப்படுகின்றனர்.

இதனால் பயணிகள் பயண நேரத்திற்கு சில மணிநேரம் முன்னரே வீட்டில் இருந்து புறப்படுவதுடன் பெரும் சிரமங்களையும் எதிர் நோக்கி வருகின்றனர்.

இது குறித்து செரண்டிப் மற்றும் எக்ஸ்போ,ஏவியேசன் தனியார் விமான சேவை நிறுவனங்கள் பல தடவை பாதுகாப்பு அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தன.

இதற்கமைய கடந்தசெவ்வாய்க்கிழமை பலாலிவிமானப் படைத் தளத்திற்கு வந்த பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அவரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ,சிவில் விமான போக்குவரத்து தலைவர் நிமலஸ்ரீ யாழ் மாவட்ட கட்டளை அதிகாரி சரத்பொன்சேகர விமானப்படைத் தளபதி ஆகியோர் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கள நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதன் முடிவில் பயணிகளை சிங்கள மகாவித்தியாலயத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தாது பலாலி விமானப் படைத் தளத்திற்கு அருகாமையில் பரிசோதனைக்கு உட்படுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

இந் நடைமுறை விரைவில் அமுல்படுத்தப்படும் எனவும் திலக் மாரப்பன குறிப்பிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில்எக்ஸ்போ, ஏவியேசன், செரண்டிப் விமான சேவை நிறுவனங்களின் அதிகாரிகளும் உடனிருந்தனர். (உ)

# மத்திய மாகாணத்தில் சுமார் 2 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள்நிலவுகின்றன

(கொழும்பு)

மத்திய மாகாணப் பாடசாலைகளில் ஆயிரத்து 900 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக மாகாணக் கல்வி அமைச்சர் வி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தில் 1200 ஆசிரியர்களுக்கும் கண்டி மாவட்டத்தில் 600 ஆசிரியர்களுக்கும் மாத்தளை மாவட்டத்தில் 100 ஆசிரியர்களுக்கும் வெற்றிடங்கள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

உயர்தர வகுப்புகளுக்கு மட்டும் 180 ஆசிரியர்கள் உடனடியாகத் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளைஆசிரியர்வெற்றிடங்களை நிரப்புவதற்கான உயர்மட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார். (உ-4)

# சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் திறந்து வைப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணை சாட்டி மாவீரர் துயிலும் இல்லம், நேற்று முன்தினம் மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புக் குழுத் தலைவர் ப. கனகலிங்கம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 12 வருடங்களாக புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையிலிருந்த சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் தற்போது மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புக் குழுவால் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-75, 43)

# மீனவர்க்கு வெளி இணைப்பு இயந்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

செலான்வங்கியினால் கடன் அடிப்படையில் யாழ். மாவட்டக்கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ள வெளி இணைப்பு இயந்திரங்கள் நாளை சனிக்கிழமைஎடுத்து வரப்படவுள்ளன.

பின்னர் இவை 25ஆம்திகதி திங்கட்கிழமை வடமாகாண கடற்றொழிலாளர் சங்கத்தில் வைத்து பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தலைவர் சி. தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

8 குதிரை வலுக் கொண்ட 25 வெளி இணைப்பு இயந்திரங்கள் இவ்வாறு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ- 16)

# வெளி இணைப்பு இயந்திர பழுது பார்த்தல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமாக் கற்கை நெறி பயிலும், தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கான வெளி இணைப்பு இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கான பயிற்சி நெறி கடந்த 12 ஆம் திகதி முதல் கொழும்பு ஏ. எம். டபிள்யு நிறுவனத்தில் இடம்பெற்று வருகின்றது.

இரு மாதங்கள் இப்பயிற்சி நெறி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-16)

# மக்களை மகிழ்வித்த மன்னன் நெடுஞ்செழியன்
# தமிழுக்குப் பெருமதிப்பைத் தந்தவனாவான்

வித்துவான்
மா. இராசமாணிக்கம்

பாண்டியன் நெடுஞ்செழியன் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் அரசாண்டிருந்தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இவன் நாடுகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற விருப்பம் இல்லாதவனாயிருந்தான். ஆனாலும், 'ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்' என்றபடி, சேர, சோழர்கள் வலுவிலே வந்து, இவனோடு போர்செய்து, தோற்றுப் போனார்கள், அதனால், அவர்கள் நாடுகளில் சில பகுதிகள் பாண்டிய நாட்டோடு சேர்ந்தன, வேள் எவ்வி ஆண்டிருந்த நாடும், இவன் ஆட்சிக்குட்பட்டது எனவே, ஒரு பெரும் பூபாகத்தைப் பாண்டியன் ஆளவேண்டியவனானான்.

## அரச அலுவலர்கள்

இவன் நாடு பெரியதாயிருந்ததால்' அதனைச் சிறு பகுதிகளாகப் பிரித்துப் பல சிற்றரசர்களை ஏற்படுத்தி, அப்பகுதிகளை ஆளச் செய்தான், தன் நாட்டின் பாதுகாப்பைக் கருதி, எல்லைப்புறங்களில் தன் சேனைகளைத் தக்க இடத்தில் இருக்கச் செய்தான்; இவன் நாடுகளைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கியதிலிருந்து நாடு அமைதியுற்றிருந்தது, இவனது அரசியலில் முற்கால வழக்கப்படி அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதுவர், சாரணர் என்ற ஐந்து கூட்டத்தினர் முதன்மைபெற்றிருந்தனர். இவர்களைத் தவிர, தேசத்தின் ஆட்சியை நடத்துவோரும் வருவாயைக் கவனிப்போரும், நியாயாதிகாரிகளும், சேனைகள் சம்பந்தமான காரியங்களைக் கவனிப்போரும் அரசன் செய்ய வேண்டிய காரியங்களுக்குத் தக்கவாறு வேளைபார்த்துக் கூறும் காலக் கணிதரும் ஆகிய இவர்கள் அரசாங்கத்தில் சிறந்த உத்தியோகத்தர்களாய் இருந்தார்கள்.

இவர்களேயல்லாமல் ஒற்றர் எனும் ஒரு கூட்டத்தினர் இருந்தனர். அவர்கள் ஒவ்வோர் அரசன் தலைநகரத்திலும் இருப்பார்கள், அந்த அரசனின் நோக்கம், அவன் செய்யும் செயல்கள் முதலியவற்றைக் கவனித்துத் தங்கள் அரசனிடம் அறிவிப்பது அவர்கள் வேலை; இங்ஙனம் பல ஒற்றர்கள் பாண்டியன் அரசாட்சியில் இருந்தார்கள், அரசன் அவர்களுக்கு அவ்வப்போது சன்மானம் கொடுப்பது வழக்கம்.

## குடிகளின் குறை தீர்ப்பவன்

நெடுஞ்செழியன் காலத்தில் அவனுடைய குடிகள் சிறந்த நாகரிகம் பெற்றிருந்தார்கள் பாண்டியன் பரந்தநோக்கமும் விரிந்தசிந்தையும் உடையவனயிருந்ததால் குடிகளிடத்தில் நிறைந்த அன்புடையவனாய் நடந்து கொண்டான். குடிகளும் அதிக அன்போடு அவனை ஆதரித்தார்கள். அரசன் குடிகளிடத்தில் ஆறில் ஒரு பகுதி கடமையாக வரிவாங்கி, அப்பொருளை அவர்கள் நன்மைக்கே செலவிட்டான். அவன் போரில் எத்துணைச் சிறந்தவனோ; அத்துணைச் சிறந்தவன் குடிகளை ஆழ்வதிலும்; இரவிலும் பாலிலும் கனவிலும் நனவிலும் குடிகளது நன்மையிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தான்.

குடிகளுக்குஎத்தகைய குறையிருந்தாலும் அதனை நேரே தன்னிடம் எந்த வேளையிலும் வந்து கூறலாம் என்று அவன் குடிகளுக்கு அறிவித்திருந்தான் அவனது ஆட்சியில் குடிகள் இன்பத்தை அறிந்தார்களே அல்லாமல் துன்பத்தை அறிந்தார்களில்லை.

பாண்டி நாடு நல்ல வளம் பெற்ற பூமி. அதன் தலை நகரமாகிய மதுரை, வைகை என்னும் ஆற்றின் கரையிலே அமைந்துள்ள சிறந்த நகரமாகும், பாண்டிய நாட்டுக் குடிகள் நல்லவர்கள் தங்களுக்கு நன்மை செய்வோரைக் கனவிலும் மறவாதவர்கள். தீமை செய்வோரை உடனே ஒழித்து விடுபவர்கள் அரசனைத் தங்கள் கண் கண்ட தெய்வமாகப் போற்றிவந்தவர்கள்.

## தமிழுக்குப் பெருமதிப்பு

தமிழ் மொழியைக் கற்று பேரறிஞனாய் விளங்கிய பாண்டியன் தமிழுக்குப் பெருமதிப்பைத்தந்தான் பலதமிழ்ப் புலவர்கள் அவன் அவையில் இருந்தனர்; புலவர்களுக்குப் பாண்டியன் குறைவின்றி வேண்டியன கொடுத்து வந்தான், பாண்டிய நாட்டில், கல்வி செல்வம் வாணிபம் விவசாயம் சிற்பம் முதலியவைகளை அதிகப் படுத்துவதில் பாண்டியன் ஊக்கத்துடன் வேலை செய்தான், அவன் நாற் படைகளையும் பெரிதும் உற்சாகங்காட்டி, அன்போடு ஆதரித்துவந்தான்,

## குணாதிசயம்

இனிப்பாண்டியன் நெடுஞ்செழியனின் குணாதிசயங்களை ஆராய்வோம். பாண்டியன் குணாதிசயங்கள், அறிஞர்கள் பாராட்டத் தகுந்தவைகளாகவே இருந்தன. அவன் இளமைப் பருவத்திலேயே பட்டத்தைப்பெற்றான். தக்க ஆசிரியனிடத்துப் பயிற்சி பெற்றவனாதலால், அவன் பாண்டிநாட்டைப் பாங்குற அரசாண்டான். பல பாண்டியமன்னர் புகழின்றி அரசாண்டு ஒழிந்தனர். நெடுஞ் செழியன் அவ்வாறு அல்லாமல். பாண்டிய குலத்திற்கே பெரும் புகழை நிலைநாட்டிமறைந்தான். அவனிடம் சிறந்தகுணங்கள் குடிகொண்டிருந்தன. இளமையிலேயே தன்மீது பொறாமை கொண்டுவந்து யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையைப் போரில் வென்றான். அச்சேரமான் தன்மீது படையெடுத்து வருவதைக் கேள்வியுற்றதும் பாண்டியன், சேரமானது அறியாமையை நினைந்து வருந்தினான், அதிலிருந்து அவன் சிறந்த குணம் உடைய அசரன் என்பது விளங்குகின்றது. தானேசேரமானைப் போரில் எதிர்த்துக்கொல்லாது, தன் பெருந்தகைமைக்கு ஏற்ப, அவனுக்குப் புத்திமதிகள் பல கூறி அனுப்பிவிட்டான். இவ்வாறுசிறந்த குணம் படைத்தவர் மிகச்சிலரேயாவர்.

இருபெருவேந்தரும், ஐம்பெருவேளிரும் ஒன்று சேர்ந்து போருக்குவந்தபோதும், பாண்டியன் அவர்கள் அறியாமைக்குப் பெரிதும் இரங்கினான். தாங்களாகவேபோர் செய்ய வந்தபோது, பாண்டியன் வாளாவிருக்கமுடியாதவனாய்ப் போர்செய்தான். வந்தவர்களைக் கொன்று விடாமல் முற்றிலும் தோற்கடித்து விரட்டியது பாண்டியன் கொண்ட பெருந்தன்மையை விளக்குகிறது.

அவர்கள் தன்னை இழித்துக் கூறினார்கள் என்பதைக் கேட்டதும் பாண்டியன் கோபங்கொண்டான். அவ்வேழுபேரையும் வெல்லாவிடின், தன்னைக்கொடுங்கோல் அரசன் என்று குடிகள் கூறக் கடவர்கள் என்றுசபதம் செய்தான் அல்லாவா? இவற்றால் அப்பெருமான் பிறர்தன்னை இகழ்வதைப் பொறாதவன் என்பதும்.

குடிகள் வருந்த அரசன் கொடுங்கோலனாயிருப்பது மிகக் கொடியது என்பதை நன்றாக உணர்ந்திருந்தான் என்பதும்தெரிகின்றன அவன் கூறிய சபதத்திலிருந்து அவன் குடிகளை மகிழ்விப்பதில் நாட்டம் உடையவன் என்பதும் செங்கோல் மன்னன் என்பதும் நன்கு விளங்குகின்றன.

## புலவர் குடபுலவியனார்

தலையாலங் கானத்தில் தான் வெற்றி பெற்ற செய்தி பற்றிப் புகழ்ந்து பாராட்டிய புலவர்களிடம் அவன் அன்பும் அடக்கமும், தருமகுணமும் காட்டி அவர்களை உபசரித்து அனுப்பியதிலிருந்து அவனது தனிப்பட்ட அருங்குணங்கள் குன்றின் மேலிட்ட விளக்குப் போல விளக்கமாகின்றன. புலவர்கள் கூறியதிலிருந்து பாண்டியனின் முன்னோர்களும் வெற்றி வீரர்களாயும் செங்கோல் அரசர்களாயும் இருந்தமை நன்கு தெரிகிறது.

புலவர் குடபுலவியனார்: சாதாரண மனிதர். அவர் தனக்குப் புத்திகூற அவர் அறிவுரையைப் பாண்டியன் பெருமகிழ்ச்சியோடு அன்போடும் பணிவோடும் கேட்டுக் கொண்டிருந்தான் இதனால் பாண்டியன் கல்வியறிவுடையவர்களிடம் எத்தகைய மதிப்பு வைத்திருந்தான் என்பது பெறப்படும். ஒவ்வொரு புலவரும் அரசரே! நீர் ஆற்று மணலினும் பல வாழ் நாட்களைப் பெற்று வாழ்க என்று தம் வாயார வாழ்த்தினர். இதனால் அவர்கள் பாண்டியனிடம் எத்துணை அன்பு கொண்டிருந்தார்கள் என்பது அறியக்கிடக்கின்றது.

அரசியல் சம்பந்தமாகப் பாண்டியன் பல சீர்திருத்தங்களைச் செய்தான் குடிகள் அவனைத் தொழுது வந்தார்களென்றால், அரசனின் அருங்குணங்களைஎடுத்துச் சொல்லவும் வேண்டுமா? இத்தகைய பெருமை பொருந்திய பாண்டியன் நெடுஞ் செழியனைத் தமிழ் உலகம் என்றும் மறக்கத்தக்கதன்று.

## கூலிக் கொடுப்பனவு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜே-142 கிராம அலுவலர் பிரிவில் ஜி. ரீ. சற் நிறுவனத்தின் உதவியுடன் மலசல கூடம் அமைத்தவர்களுக்கான கூலிக் கொடுப்பனவு 1500 ரூபா தற்போது காசோலையாக வழங்கப்பட்டு வருகின்றது. (உ-258)

## இலகு தவணைக் கடன்

(ஆனைக்கோட்டை)

செலான் வங்கியினால், சாவல்கட்டு ஜே-131 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு இலகு தவணைக்கடன் அடிப்படையில் கடன் வழங்கப்பட்டு வருகின்றது;

இதுவரை 25 பேர் இதனால் பயனடைந்துள்ளனர். (உ-201)

## வெளிஇணைப்பு இயந்திரம் சுத்திகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நசனல் வங்கியினால் முதற்கட்டமாக வழங்கப்பட்ட வெளி இணைப்பு இயந்திரங்களுக்கான சுத்திகரிப்புப்பணி எதிர்வரும் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வரை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சமாசத்தில்இடம்பெறவுள்ளது.

முதற் கட்டமாக வெளி இணைப்பு இயந்திரங்களைப் பெற்றவர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-16)

## குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர எல்லைக்குள் இருக்கின்ற குப்பை கூழங்களை எவ்வாறு அகற்றுவது என்பது பற்றி விளக்குவதற்கு நடவடிக்கைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ். மாநகராட்சிமன்றசுகாதாரக் குழுக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது

இக்குழுவில் சுகாதார வைத்திய அதிகாரி, பொறியியல் பிரிவு அதிகாரி பிரதம சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பலர் இடம்பெறுகின்றனர்.

இதேவேளை, 50 தற்காலிக சுகாதார தொழிலாளிகளை நியமிப்பதற்கும் இக்கூட்டத்தின் போது முடிவு செய்யப்பட்டுள்ளது. (ந-9)

## யாழில் 102.7 மில்லியன் நிதியில்
# 16 நிக்கொட் திட்டங்கள் அமுல்

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் திட்டங்களை இவ்வாண்டு யாழ்.குடாநாட்டில் அமுல் செய்வதற்கென 102.7 மில்லியன் நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு நிக்கொட்மாகாணமட்ட இணைப்பாளர் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன் கீழ் 16 திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், இவற்றில் கல்வி தொடர்பான 9 திட்டங்களுக்கென 53.4 மில்லியனும், சுகாதாரம் தொடர்பான 5 திட்டங்களுக்கென 12.3 மில்லியனும் வீடுகள் புனரமைப்புக்கென 30 5 மில்லியனும், விவசாய அபிவிருத்தித் திட்டத்திற்கென 6 5 மில்லியனும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும்,

இவை இவ்வாண்டுக்குரிய திட்டங்களாயினும் அடுத்த ஆண்டுஜனவரியிலேயே அமுல் செய்யப்படவுள்ளதாகவும் நிக்கொட அமைப்பின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார். (உ-16)

## பிரி. வர்த்தகர் 11 பேர் இலங்கை வருகின்றனர்

(கொழும்பு)

11 அங்கத்தவர்களைக் கொண்ட பிரிட்டிஷ் வர்த்தகத் தூதுக்குழு அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளது.

லண்டன் வர்த்தக சம்மேளனத்தின் பிரதிப் பிரதமர் நிறைவேற்று அதிகாரி தலைமை தாங்கும், இக்குழு 4 நாட்கள் இங்கு தங்கியிருக்கும் எனவும்,

இந்நாட்களில் உள்ளூர் வர்த்தக கைத்தொழில் பிரமுகர்களை சந்திக்கும் என்றும் கூறப்படுகின்றது. (உ-10)

## வேலணை பாடசாலையில் கணனி தகவல் அலகு

(ஆனைக்கோட்டை)

வேலணை துரைச்சுவாமி மத்தியமகாவித்தியாலயத்தில் 'கணனி தகவல் அலகு' விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் முதல் கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கும் அடுத்த கட்டமாக பழைய மாணவர்களுக்கும் கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அதிபர் பி. அருணகிரிநாதர் தெரிவித்தார்,

இதேவேளை, மேற்படி பாடசாலையில் 4 இலட்சம் ரூபாய் செலவில் மலசல கூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. (உ-201)

## இலங்கைத் தேயிலையை மேற்குவங்கம்பெருமளவில் கொள்வனவு செய்யும்

இலங்கையில் இருந்து அதிகளவு தேயிலையை மாதம் தோறும் கொள்வனவு செய்ய இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள மேற்கு வங்காள சட்ட சபையின்சபாநாயகர் எச். எ. ஹலீம் இலங்கை வர்த்தக சமூகத்தினருடன் சந்தித்து பேசிய போது இவ் இணக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்கு வங்காளத்தில் இருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமுதலீட்டாளர்கள் தொழில் புலமையாளர்கள், கலைஞர்கள் ஆகியோரைக் கொண்ட குழுவிற்குதலைமை தாங்கி இவர் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2002

General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2002

விவசாயம் : I மணி

விவசாயம் : II மணி

ஆக்கம் : ப. அருந்தவம்
B.A, Dip - in - Agri, Trd Agri
யா/உடுவில் மான்ஸ்.ம.வி
சுன்னாகம்.

## பகுதி - I

**(1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**(2) 1முதல் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் (1) (2) (3) (4) என எண்ணிடப் பட்டுள்ளது. இதில் சரியானது அல்லது மிகப்பொருத்தமானது என நீங்கள் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.**

1. பண்டைய இலங்கையில் உலகப் பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனத் தொகுதிகள் இருந்தமையை எல்லோரும் அறிவர் அவ்வகையில் பின்வரும் நீர்ப்பாசனத் தொகுதிகளை அமைத்த மன்னர்கள் முறையே மின்னேரியா, யோதகால்வாய், எலகரக்கால்வாய்
(1) தேவநம்பியதீசன், 2ஆம்முகலன், 2ஆம் அக்கபோ
(2) தாதுசேனன், பராக்கிரமபாகு, வசபன்
(3) மகாசேனன், தாதுசேனன், வசபன்
(4) மகாசேனன், பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன்

2. ஒரு ஏக்கரில் நாட்டப்படக்கூடிய தாவரங்களின் உயர் எண்ணிக்கை தங்கியிருப்பது
(1) எதிர்பார்க்கப்படும் விளைச்சலில் (2) கிடைக்கக்கூடிய நீரில்
(3) வேர்த்தொகுதியின் ஆழத்தில் (4) கிளைகளினதும் இலைகளினதும் பரப்பில்

3. பயிரை உற்பத்தி செய்யத் தேவையான காரணிகளில் முக்கியமானவை
(1) முகாமிப்பு,சந்தை,உழைப்பு,நிலம்
(2) சந்தை,நிலம்,உழைப்பு,முகாமிப்பு
(3) நிலம்,உழைப்பு,மூலதனம்,முகாமிப்பு
(4) பொறிகள்,உழைப்பு,சந்தை,மூலதனம்

4. மலைநாட்டுப் பிரதேசங்களில் மண்ணுடன் சேர்க்கப்படும் சேதனப்பொருட்கள் மிகமெதுவாக உக்கலடைகிறது இதற்கான காரணம்
(1) போதுமான அளவு ஒட்சிசன் கிடைக்காமை
(2) போதிய அளவு வெப்பநிலை நிலவாமை
(3) காபனீர்ஒட்சைட் வாயு அதிகளவில் இருக்கின்றமை
(4) மண்ணில் ஈரலிப்புத் தேங்கியிருக்காமை

5. ஒளி கிடைக்கப்பெறும் நேர அளவுக்குக் காட்டும் துலங்கலுக்கு அமைய பயிர்த் தாவரங்கள் குறுகிய பகற்காலத்திற்குரியவை,நீண்ட பகற்காலத்திற்குரியவை, நாள் நடுநிலையானவை என 3வகையாக வகுக்கப்பட்டுள்ளன. இப்பாகுபாட்டிற்கு அடிப்படையாக அமைவது
(1) பயிர் வளர்ச்சியில் ஒளியின் ஆதிக்கம்
(2) பயிர்ப் பூர்த்தலில் ஒளியின் ஆதிக்கம்
(3) பயிர்களின் விளைச்சலைப் பெறும்வரையிலான காலம்
(4) பயிர்களின் பழங்கள் தோன்றுவதில் வெப்பநிலையின் ஆதிக்கம்.

6. மண்துணிக்கைகளைப் பற்றி உறுதியாகப் பிணைந்திருக்கும் மண்ணீர்ப்படலம்
(1)மருகுநீர் (2) மயிரிழை நீர் (3) ஈர்ப்பு நீர் (4) சுயாதீன நீர்

7. 0.002m.mஇலும் குறைந்த அளவுள்ள மண் கனிப்பொருள்
(1) மணல் (2) களி (3) அடையல் (4) பரல்

8. இலங்கையின் பெரும்பாலான ஆறுகளின் நீரேந்து பிரதேசங்கள் அதிக மழை பெறுவது.
(1) வடகீழ் பருவக் காற்று மூலம் (2) தென்மேல் பருவக் காற்று மூலம்
(3) மேற்காவுகை ஓட்டம் மூலம் (4) சூறாவளி மூலம்

9. ஒரு கமகீகாரன் மரக்கறிகளை ரூபா 300/-இற்கு விற்று அதே நாளில் ரூபா 200/-ஐ வளமாக்கிகளுக்காகச் செலவிட்டான் இக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்ய வேண்டியது.
(1) ஐந்தொகை (2) பயிர்ச்செய்கைக் குறிப்பேடு
(3) சாமான் பதிவேடு (4) காசேட்டில்

10. இலங்கையில் உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
(1) கண்ணொருவ (2) சீதாஎரிய (3) மகாஇலுப்பலம (4) பத்தரகொட

11. வளிமண்டலத்தில் இருக்கும் ஒட்சிசன் சதவீதத்தைப் பேணுவதற்குப் பிரதானமாக உதவும் செயன்முறை
(1) சுவாசம் (2) ஆவியுயிர்ப்பு (3)ஒளித்தொகுப்பு (4) பிரிகை

12. குக்பிற்றேசியே குடும்பத்திற்குரிய பயிர்க்கூட்டம்
(1) மிளகாய், கத்தரி, தக்காளி
(2) சோளம், இறுங்கு, திணை
(3) பீர்க்கு, பாகல், புடோல்
(4) அவரை, கௌப்பி, சோயா

13. இப்பில், இப்பில் விதைகளை நாட்டுவதற்கு முன் வெந்நீர்ப்பரிகாரம் கொடுப்பதற்குரிய காரணம்.
(1) கிருமிகளை அழிப்பதற்கு (2) உறங்கு நிலையைக் குலைப்பதற்கு
(3) பூச்சிகளை அழிப்பதற்கு (4) முளைதிறன் வீதம் அறிவதற்கு

14. தரைமேல் வித்து முளைத்தலைக் காட்டும் தாவரக் கூட்டம்
(1) தட்டைப்பயறு, சோயா, உழுந்து (2) சிறகவரை, சோளம், இறுங்கு
(3) சிறகவரை, நெல், கடலை (4) இறுங்கு, கம்பு, சோளம்

15. உயர் நாற்றுமேடைப் பாத்திகளைத் தயாரிக்கும போது வழமையாக அகலம் ஒரு மீற்றராகக் கட்டுப்படுத்தப்படுகிறது இதன் காரணம்.
(1) ஆயத்தம் செய்வதற்கு வசதியானதாகும்
(2) அதை அழகு செய்தலாகும்
(3) பல பாத்திகளை வைத்திருப்பதற்காகும்
(4) இலகுவான பிற்கவனிப்பை இயலச் செய்வதற்காகும்

16. சாதாரண பிடுங்கிப் பயிரிடும் முறைகளுக்குத் துலக்கம் காட்டாத பயிர்களுக்கு ஒரு பொருத்தமான நாற்றுமேடை நுணுக்கம் பின்வருவனவற்றுள் எது.
(1) டபொக் (2) நெரிடோக்கா (3) உயர்நாற்று மேடை (4) தாழ்நாற்றுமேடை

17. 200 'பயறு' வித்துக்கள் எடுத்து றக்டொல் முறையில் முளைதிறன் வீதம் பரிசோதித்த போது 10 வித்துக்கள் முளைக்கவில்லை ஆயின் இவ் வித்தின் முளைதிறன் வீதம்
(1) 5% (2)10% (3) 95% (4) 90%

18. காயிலிருந்து வேறாக்காது, காயினுள் வித்துக்கள் இருக்கும் போதே களஞ்சியப்படுத்தக்கூடிய பயிர் வகையைப் பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க.
(1) புடோல் (2) கௌப்பி (3) கத்தரி (4) மிளகாய்

19. தரையைச் சமப்படுத்தத் தேவையற்றதும், சரான நீரை வழங்குவதும், மண்ணரிப்பைத் தடுக்கக்கூடியதுமான நீர் வழங்கும் முறை
(1) சால்நீர்ப்பாசன்ம் (2) வட்டத்தட்டு நீர்ப்பாசனம்
(3) தூவல்நீர்ப்பாசனம் (4) பரவல்நீர்ப்பாசனம்

20. ''பைற்றொப்தோரா பாமிவோரா'' என்பது ஒரு
(1) பங்கசு இனமாகும் (2) வைரசு இனமாகும்
(3) வட்டப்புழு இனமாகும் (4) பற்றீரிய இனமாகும்

21. பொலீத்தீன், பிளாத்திக் போன்ற பொருட்கள் மண்ணுடன் சேர்வதால்
(1) மண்வளம் அதிகரிக்கும்
(2) மண்ணில் உயிரியல் தொழிற்பாடு அதிகரிக்கும்
(3) மண்ணின் நீர் கொள்ளளவுஅதிகரிக்கும்
(4) சூழல் மாசடையும்

22. துண்டங்களை நட்டு பின்னர் ஒட்டுவேலை மேற்கொள்ளப்படும் தாவர இனம் யாது?
(1) மா (2) றப்பர் (3) ரோசா (4) றம்புட்டான்

23. நிலக்கீழ்த் தண்டுகளிலே உணவு சேமித்து வைக்கப்படும் பயிர் இனம்
(1) மரவள்ளி(2) வத்தாளை (3) இஞ்சி (4) கரற்

24. மக்னீசியம் குறைவாகவுள்ள அமிலத்தன்மையுள்ள மண்ணுக்குச் சேர்க்கும் பொருள்
(1) இல்மனைற்று (2) கல்சைற்று (3) தொலமைற்று (4) ஏமனைற்று

25. அநேகமான பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் மயிர்க் கொட்டிகள் பின்வருவன வற்றுள் எக்குடம்பிகளிற்குரிய வடிவங்கள் ஆகும்.
(1) வண்டுகள் (2) அந்துகள் (3) மூட்டுப்பூச்சிகள் (4) தத்திகள்

26. சில வேளைகளில் குக்குர்பிற்றே குடும்பப் பயிர்களின் காய்கள் இளம் பருவத்தில் பொலித்தீன் உறைகளால் மறைத்துவைப்பதுண்டு. இதற்குரிய முக்கிய காரணம்
(1) காய்கள் மூலம் நிகழும் ஆவியுயிர்ப்பைக் கட்டுப்படுத்தல்
(2) பழஈயினால் ஏற்படுத்தப்படும் சேதத்தைக் கட்டுப்படுத்தல்
(3) காய்களின் நிறத்தைப் பேணல்
(4) அவுலுக்கப்போரா பூச்சியின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல்

27. ''கிரமக்கோன்'' விசிறலுக்குப் பயன்படுத்தப்பட்ட விசிறலெந்திரமொன்றைக் கழுவாமல் மாணவன் ஒருவன் நளஅவரைகளுக்கு ''சுமிசிடீன்'' விசிறுவதற்குப் பயன் படுத்தினால் இதன் விளைவு
(1) பீடைகள் அழிவு (2) பங்கசுக்களின் அழிவு
(3) நன்மை செய்யும் அங்கிகள் அழிவு (4) முழுத்தாவரத்தினதும் அழிவு

28. அண்டைக்காலத்தில் தென்னைச் செய்கையில் நாடளாவிய ரீதியில் சேதம் செய்யும் பீடை.
(1) செவ்வண்டு (2) காண்டாமிருக வண்டு (3) மைற் (4) தென்னை மயிர்க்கொட்டி

29. மண்ணிற்கு சுண்ணாம்பிடலின் நோக்கம்
(1) அமிலத்தன்மையைக் குறைத்தல் (2) மண் மணியுருவாதலைத் தூண்டல்
(3) மண்ணிற்கு கிடைக்கும் கல்சியத்தின் அளவைக் கூட்டல் (4) மேற்கூறிய யாவும்

30. நெற்செய்கையில் உயிரியல் கட்டுப்பாட்டுக்காக பயன்படுத்தும் உயிரினம்
(1) கொச்சி நெல்லா வண்டு (2) நிசாரா
(3) ஐங்கோண மூட்டுப் பூச்சி (4) பச்சையிலைத்தத்தி

31. கோழிகளுக்கு சிப்பித்தூள் கலவை வழங்கக் காரணங்கள்
(1) கோழிகளுக்கு தேவையான கல்சியம் கனிப்பொருள் கிடைப்பை அதிகரித்தல்
(2) நன்கு விருத்தியடைந்த முட்டையோட்டைப் பெறல்
(3) கோழிகளின் உணவுச்சமிபாட்டுத் திறனை மேம்படுத்தல்
(4) மேற்கூறிய யாவும்.

32. பசுவின் கர்ப்ப காலம்
(1) 270-280 நாட்கள் (2) 160-180 நாட்கள்
(3) 135-140 நாட்கள் (4) 100-120 நாட்கள்

33. மந்தையின் (Cattle) வயதைக் காணப்பயன்படுத்தும் ஒரு பொது முறை
(1) தோலின் வன்மையின் தன்மை (2) பற்களின் வளர்ச்சி
(3) கண்களின் பிரகாசம் (4) காற்குளம்பின் வளர்ச்சி

34. உயர் நன்மைகளைப் பெறுவதற்கு மந்தைப்புற்களை அறுவடை செய்வதற்கான சரியான நேரம
(1) அவை பூக்க முன்னர் (2) அவை பூத்த பின்னர்
(3) தாவரம் உலர ஆரம்பிப்பதற்கு சற்று முன்னர்
(4) விதையிட்டு ஓரிரு வாரத்தின் பின்னர்

35. இலங்கையில் உற்பத்தி செய்யும் கோழித்தீன் பங்கீட்டில் பொதுவாகப் புரதத்தேவையை ஈடு செய்யும் தீன்
(1) சோளம் தூள் (2) மீன்தூள் (3) ஒட்டுத் துணிக்கைகள் (4) கோதுமை உணவு

36. நியூசிலண்டவைற்,லார்ஜ்வைற்,சாணன் சகிவால் போன்ற வர்க்கங்கள் முறையே
(1) தாரா,கோழி,செம்மறி,வெள்ளாடு (2) முயல்,பன்றி,ஆடு,மாடு
(3) தாரா, கோழி, முயல்,பன்றி (4) எருமை, முயல்,பன்றி,தாரா

37. கோழிப்பண்ணையில் வியாபித்திருக்கும் வைரஸ் நோய் ஒன்று
(1) புல்வோரம் (2) கொச்சிடியோரிஸ் (3) இறனிகெட் (4) கொலரா

38. மாட்டுப் பண்ணையில்''அஷன்டோல்'' பயன்படுத்துவது
(1) உண்ணிகளைக் கட்டுப்படுத்த
(2) விலங்குகளின் கனிப்பொருள் உள்ளெடுப்பைக் கூட்டுவதற்கு
(3) புரதத்தை வழங்குவதற்கு
(4) வட்டப்புழுக்களைக் கட்டுப்படுத்த

39. தூய இன ஐரோப்பிய பசு ஒன்றினை உலர் வலயத்திற்கு கொண்டு வந்ததும் அதன நடத்தையில் நாம் அவதானிக்கக்கூடியது
(1) சுவாச வீதம் குறைவடைதல் (2) சுவாச வீதம் அதிகரித்தல்
(3) அதிகளவு உணவை உள்ளெடுத்தல் (4) கன்றீனல் தாமதமாகுதல்

40. பாலில் அடங்கியுள்ள காபோவைதரேற் எப்பெயரால் அழைக்கப்படுகிறது
(1) கலற்றோஸ் (2) லக்ரோஸ் (3) கேசின் (4) மோல்ரோஸ்

## பகுதி - II

**முதலாம் வினாவுக்கும் வேறு நான்குவினாக்களுக்கும் விடை தருக?**

01. 1) பயிர் விளைச்சலைக் கூட்டுவதற்கு மண்ணில் இருக்க வேண்டிய ஐந்து முக்கிய இயல்புகளைக் குறிப்பிடுக?
2) மணல் மண், களிமண் ஆகியவற்றினிடையிலான பிரதான வேறுபாடுகள் யாவை?
3) மண் பெறும் நீர்,மண்ணிலிருந்து அகலும் முறைகள் யாவை?
4) மண்ணரிப்பினால் ஏற்படும் தீயவிளைவுகள் நான்கினைத் தருக?

02. 1) வித்துக்களின் உறங்குநிலை ஏற்படுவதற்கான காரணம் யாது? வித்துக்களின் உறங்கு நிலையை அகற்றப் பயன்படும் இரு முறைகளைத் தருக?
2) விவசாய இரசாயனப் பொருள்களை இடும் சந்தர்ப்பத்திலும் இட்டபின்னரும் கைக்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடை முறைகள் யாவை?
3) சீரற்ற நீர் வடிகாலமைப்பினால் பயிர்களுக்கு ஏற்படக் கூடிய தீய விளைவுகள் யாவை?

03. 1) வெவ்வேறு பிரதேசங்களில் வெப்பநிலை வேறுபடுவதற்கான காரணம் யாது?
2) காற்றினால் பயிர்களுக்கு ஏற்படக்கூடிய தீய விளைவுகள் நான்கு தருக?
3) இரசாயன உரப் பாவனையின் நன்மைகள் இரண்டையும், தீமைகள் இரண்டையும் தருக?

04. 1) ''நெரிடோகோ'' நாற்று மேடைகளைத் தயாப்படுத்தும் முறையை வித்து நடும் நிலை வரை வபரிக்க?
2) ஒட்டுமாங்கன்றுகளை உருவாக்க ஒட்டுக்கட்டை பெறப்பொருத்தமான மாமரங்களின் குணாம்சங்களைவிபரிக்க?
3) நாற்று மேடைக்குப் பொருத்தமான இடமொன்றினைத் தெரியும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

05. 1) சுற்று முறைப் பயிர்ச் செய்கையின் அனுகூலங்கள் யாவை?
2) இலங்கையிலே அதிகளவில் காணப்படும் சொலனேசியே குடும்பத்தின் பயிர்களைத் தாக்கும் பக்டீரிய நோயைப் பெயரிட்டு, அதன் நோய்க்காரணகர்த்தா ,நோயின் குணங்குறி அதனைக் கட்டுப்படுத்தும் விதம் ஆகியவற்றை விபரிக்க?
3) பயிர்களின் இடையிற் பண்படுத்தலின் நோக்கங்கள் 4 தருக?

06. 1) விலங்கு இல்லங்கள் அமைப்பதன் பிரதான நோக்கங்கள் யாவை?
2) பாலை நற்காப்புச் செய்யும் 4 முறைகளை உதாரணங்களுடன்தருக?
3) இலங்கையில் மாடுகளை அதிக அளவில் தாக்கும் ஓர் நோயைக் குறிப்பிட்டு அந்நோயின் காரணகர்த்தாவையும் நோயின் குணங்குறிகளை யும் விபரிக்குக?

07. 1) பின்வரும் உணவு வகைகளைக் கோழிகளுக்குக் கொடுப்பதன் முக்கியத் துவம் யாது?
அ) தானியம்
ஆ) நுண்ணுயிர்க் கொல்லி
இ) இலை வகை
ஈ) சிப்பித்தூள்
2) அடைவைக்கப் பொருத்தமான முட்டையில் காணப்பட வேண்டிய இயல்புகள் யாவை?
3) இலங்கையில் உலர் வலயத்தில் புற்களைச் சேமித்து மாடுகளிற்கு ஊட்டும் முறைகள் தந்து, ஏன் உலர் வலயத்தில் புற்கள் சேமிக்கப்படல் வேண்டும் என்பதனை ஆராய்க?

## நேற்றைய விஞ்ஞானபாடத்தின் பகுதி - Iஇற்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) 4 | 02) 3 | 03) 3 | 04) 4 | 05) 2 | 06) 4 | 07) 1 | 08) 2 | 09) 4 | 10) 3 |
| 11) 1 | 12) 2 | 13) 2 | 14) 4 | 15) 2 | 16) 2 | 17) 3 | 18) 4 | 19) 2 | 20) 2 |
| 21) 2 | 22) 2 | 23) 1 | 24) 4 | 25) 3 | 26) 3 | 27) 3 | 28) 4 | 29) 3 | 30) 3 |
| 31) 2 | 32) 4 | 33) 4 | 34) 2 | 35) 1 | 36) 4 | 37) 3 | 38) 4 | 39) 3 | 40) 4 |

## தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு

# சகல அரசியல் கட்சிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடுவார்

## பொதுக் கருத்தொன்றை எட்டவும் திட்டமாம்

(கொழும்பு)

**இன்று நிலவும் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கண்டறியும் பொருட்டு, வரவு செலவுத்திட்ட விவாத முடிவில் சகல அரசியற் கட்சிகளையும் கொண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்;**

ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் பிரதிநிதிகள் இம்மாநாட்டிற்கு அழைக்கப்படுவர்.

வடக்கு-கிழக்கில் நிலவும் பிரச்சினைகள், சமாதானப் பேச்சுக்கள் என்பன ஆராயப்பட்டு பொதுக்கருத்தின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்படவிருக்கின்றன;

அண்மையில் நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி தெரிவித்தபடி சக வாழ்வு அடிப்படையிலான நிர்வாகத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் என்று ஜனா[illegible] செயலகம் மேலும் தெ[illegible]துள்ளது;

இதேவேளை, ஜனாதிபதி செயலகத்திலேயே இம்மாநாடு நடைபெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## பாடசாலை மாணவனை முதலை இழுத்துச்சென்றது

### சடலம் மீட்கப்படவில்லை

(வாழைச்சேனை)

வாழைச்சேனை - ஓட்டமாவடிப் பகுதியில் 12 வயதுப் பாடசாலை மாணவன் ஒருவனை முதலை இழுத்துச் சென்றுள்ளது;

மேற்படி மாணவனின் சடலம் இதுவரையும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இப்பகுதியில் முதலைகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதாக ஏற்கனவே பொது மக்கள் புகார் தெரிவித்திருந்தனர்.

இதனால், விவசாயம், மீன்பிடி முதலான தொழில்களிற்கு செல்ல அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டு வருகின்றனர். (உ-10)

## தமது தரப்பு நடவடிக்கைகள் குறித்து

# யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு ஜனாதிபதியை சந்தித்து விளக்கம்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முதன்முறையாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்காவை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இச்சந்திப்பு ஜனாதிபதிமாளிகையில் இடம்பெற்றுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு இலங்கையில் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியிடம் விளக்கியதாக ஜனாதிபதியின் ஊடகப்பணிப்பாளர் நாயகம் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யுத்தநிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண்ட் பியூறு ஹொவ்டே உட்பட 3 அதிகாரிகள் கலந்துகொண்டனர். (உ-4)

## ஈ.பி.டி.பி அலுவலகம் மீது இனந்தெரியாத குழு தாக்கு

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு பிரதான வீதியில் அமைந்துள்ள தமது அலுவலகத்தின் மீது புதன் நள்ளிரவு இனந் தெரியாத கும்பலொன்று பெற்றோல் குண்டுகளை வீசி அலுவலகத்தை முற்றுகையிட முயற்சித்ததாகவும்,

அச்சமயம் அங்கு பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸார் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து, அலுவலகத்தைத் தாக்க வந்த இனந்தெரியாத கும்பல் அங்கிருந்து தப்பியோடியதாகவும் ஈ பி டி பி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் நடைபெற்ற சமயம் அங்கு இருந்த நான்கு ஈ பி.டி பி உறுப்பினர்களில் நீர்வேலி பிரதேசசபைத்தலைவர் உட்பட இருவரைக்காணவில்லை என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் நடைபெற்ற வேளை இவ் அலுவலகத்திற்கு அண்மையிலுள்ள மக்கள் பெரும் கிலிகொண்டதாகவும் தெரியவந்துள்ளது

அதேவேளை, இச்சம்பவத்தைத் தொடர்ந்து நீர்வேலி பிரதேசசபைத் தலைவரான பூ. குணசிங்கம் மற்றும் வேறோர் ஈ.பி.டி.பி உறுப்பினரையும்காணவில்லை எனவும்,

அத்துடன், ஈ பி டி பியின் சாவகச்சேரி அலுவலகத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, குடாநாட்டிலுள்ள அனைத்து ஈ.பி.டி பி அலுவலகங்களுக்கும் கடந்த சில வாரங்களில் இருந்து பொலிஸ்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-77,248,43)

## மகஜர் கையளிப்பு

(மந்திகை)

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பி யினரைவெளியேற்றுமாறு கோரி வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் போர் நிறுத்தகண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

கடந்த சனிக்கிழமைநெடுந்தீவு பிரதேசத்திற்குள் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் ஆயுதங்களுடன் ஊடுருவியுள்ள ஈ.பி.டி பியினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி சமாதானத்தை சீர்குலைத்துள்ளனர்.

இவர்களை நெடுந்தீவிலிருந்து வெளியேற்று மாறு தங்களை கேட்டுக் கொள்கின்றோம் என்று அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

# கொழும்புத்துறை அபிவிருத்திக்கு முழு அளவில் ஒத்துழையுங்கள்

### மாநகர முதல்வருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

'கொழும்புத்துறையின் அபிவிருத்திக்கு உதவுங்கள்' என்ற தலைப்பிட்டு, கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையமும் ஜெற் லலனர்ஸ் கழகமும் இணைந்து யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையனுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளன;

அக்கடிதத்தின் விபரம் வருமாறு;

2000ஆம் ஆண்டுமுதல் மக்கள் அனைவரும் வீடுகளை விட்டு வெளியேறிய கொழும்புத்துறைப் பிரதேசத்தில் தற்போது ஓரளவு இயல்பு நிலை ஏற்பட்டு மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

எனவே, தங்கள் சபைக்குரிய எல்லைக்குள் உள்ள எமது பிரதேசத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்குரிய அவசிய உதவிகளை செய்து தருமாறு தங்களை வேண்டுகிறோம்.

● நீண்ட காலமாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்டுள்ள - மிகவும் தூர்ந்து குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கும் விபுலானந்தர் வீதி, புங்கங்குள வீதி, சுவாமியார் வீதி, இலந்தைக்குளம் வீதி, ஆகிய வீதிகளை உடன் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

● 2000 ஆம் ஆண்டு முதல் எந்தவித நிதி ஒதுக்கீட்டு உதவியும் பெறாத சனசமூக நிலைய புனரமைப்பிற்கும், தளபாடக் கொள்வனவிற்கும் உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்தல்;

நிலையப் பாலர்பாடசாலை உடனடியாக ஆரம்பிக்க வசதியாக அதற்குரிய தளபாடக் கொள்வனவிற்கு நிதி உதவி செய்தல்;

● கொழும்புத்துறைப் பகுதி வீதி மருங்குகளையும், வெற்றுக் காணிகளையும் சுத்தப் படுத்தல் ஆகியவற்றிற்கு தங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

கொழும்புத்துறைப் பகுதி மக்களுக்காய் உரத்துக் குரல் கொடுக்கும் தாங்கள் உடனடியாக செயற்பட்டு மேற் கூறிய உதவிகளைச்செய்து மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்த்து உதவுவீர்கள் என நம்புகிறோம் என்றுள்ளது. (உ)

## விமான

தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையினால் இரண்டு நாடுகளிலும் உள்ள விமானக் கம்பனிகள் கட்டுப்பாடு இன்றி விமானப் போக்குவரத்தை நடத்த முடியும் என வெளிநாட்டு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

## புலிகளின் கட்டுப்பாட்டில் வங்கிகள் இயங்கவில்லை

### மத்திய வங்கிக்கு அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவர்களின் வங்கிகள் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டாலும் அது தொடர்பாக விடுதலைப் புலிகளால் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படவில்லையென்று நிதியமைச்சர் கே. எம்; சொக்ஸி தெரிவித்துள்ளார்;

விடுதலைப் புலிகளின் வங்கி தொடர்பாக ஆராய்ந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அவ்வாறன வங்கிகள் இயங்கவில்லையென்று மத்திய வங்கிக்கு அறிவித்துள்ளதாகவும்,

அனுமதியின்றி எந்தவொரு வங்கியும் செயற்பட முடியாதென்றும் விடுதலைப்புலிகள் அல்லது ஈழம் என்ற பெயரில் எந்தவொரு வங்கி நடவடிக்கைக்கும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்; (உ-4)

## திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையம் வளம்மிக்கதாகமாற்றப்படும்

### கலாநிதி அசோகா டி சில்வா

(கொழும்பு)

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தை வளம் மிக்கதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு, திறந்த பல்கலைக்கழக கொழும்பு பிராந்திய நிலைய சட்ட பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அசோகா டி சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய நிலையத்தில் சட்டமாணி கற்கை நெறிக்கான பதிவுகள் இணைப்பாளர் க. ஞானேந்திரன் தலைமையில் நேற்று ஆரம்பமாகின;

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்;

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எதிர் காலத்தில், யாழ். நிலையத்தில் போதிய விரிவுரையாளர்களையும் ஏனைய வசதிகளையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன்,

உபகரண வசதிகளைப் பெருக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில், கொழும்பு பிராந்திய நிலைய சட்டவிரிவுரையாளர் நாணயக்கார மற்றும் ராஜித சேனரட்ண ஆகியோரும் கலந்துகொண்டனர்; (உ-9)

வேட்டினும் உண்டோர்உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

குறள்

# வலம்புரி

## இந்தியா பங்குபற்றுமா?

எதிர்வரும் 25ந் திகதி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், விடுதலைப்புலிகளின் சார்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் கலந்துகொள்வதால், மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது.

அதேவேளை அரசும்-விடுதலைப்புலிகளும் முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதும், யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்குக் கிழக்கைப் புனரமைப்பதும் நோக்கமாக இருப்பதால் இம்மாநாட்டில் இலங்கையின் அண்டைய நாடான இந்தியா பங்குபற்றுவது அவசியமாகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந்தியா பங்குபற்றுவது அந்நாட்டிடமிருந்து நிதியுதவிகளை பெறுவதற்காகவல்ல. மாறாக, இலங்கையின் இன விவகாரத்தில் விரும்பியோ, விரும்பாமலோ இந்தியாவின் ஆசீர்வாதம் தேவையாகவுள்ளது.


இந்தியாவின் எதிர்ப்போடு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதென்பது தெரிந்த விடயமே. இந்நிலையில் ஒஸ்லோ மாநாட்டில ஆந்தியாவை எப்படியும் பங்குபற்றவைப்பதில் இலங்கை அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

ஆயினும் இந்தியாவை பொறுத்தவரை மௌனமாக இருந்துவிட்டு இறுதி நேரத்தில் மாநாட்டில் பங்குபற்றாமல் தட்டிக்கழிப்பதே நோக்கமாகும். விடுதலைப் புலிகளைத் தனது நாட்டில் தடை செய்த நாடு- புலிகளுக்கு ஆதரவாகப் பேசினால அவர்களைச் சிறைக்குள் தள்ளக்கூடியதாக பொடா சட்டத்தைக் கொண்டுவந்த நாடு, அச்சட்டத்தின்படி வை. கோபாலசாமியை சிறைக்குள் அடைத்துவைத்திருக்கும் போது ஒஸ்லோ மாநாட்டில் இந்தியா பங்குபற்றுமென எவரும் எதிர்பார்க்க முடியாது.

அவ்வாறு இந்தியா பங்குபற்றுவதாயினும் அரசதரப்பு உயர்மட்டக் குழுவினர் பங்குபற்ற மாட்டார்கள் என்பதுதெளிவு

# இறையை நோக்கி பிரார்த்தனையில் இருந்தால்

# குறைகள் அகன்று நிறைகள் வருமே



## வெள்ளி நற்சிந்தனை

சிவபெருமான் வானாகி வளியுமாவார் நீராகிநெருப்புமாகி நிலனுமாவார் சூரியன் சந்திரனுமாவார். உடம்பாகி உயிராகி உணர்வுமாவார் உலகங்கள் அனைத்துமாய் உலகுக்கு அப்பால் அனாத வடிவாகி நிற்பவர்.

### மூன்று புராணங்கள்

சிவபிரானுடைய திருக்கண்கள் மூன்று அவைபோலப் போற்றப்படும் புராணங்கள் மூன்றுள திருக்கண்கள் சூரியன், சந்திரன், அக்கினி என்பன. புராணங்களும் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்பன. சிவபிரானுடைய திருக்கண் ஒளி, சோதி, சுடர். சூளொளி விளக்காகப் பிரகாசிப்பது போல முப்பெரும் புராணங்களையும் கைக்கொள்ளலாம்,

புராணங்கள் வாழ்வியலைச் செம்மை செய்ய வல்லன. மேலான ஒழுக்கத்தால் அடையும் மேன்மையையும் தீமையினால் பெறும் தாழ்வையும் போதிப்பன. சிவசம்பந்தத்தை கூட்ட வல்லன இவை போல அள்ளில்லாத, வறட்டு மனங்களை வளமாக்க வல்ல கருவூலங்களைத் தன்னகத்தே உரித்து நிற்பன புராணங்கள்.

அவற்றுள் ஒன்று தனக்கு ஏற்படும் தவிர்க்க முடியாத இன்னல்களை இறைவனிடத்தில் எடுத்து முறையிடுவன. முறையிட்டால் இறைவன் குறைகளைந்து நிறைவாக்கிய நேர்மை இன்பம் பயப்பன.

அவரவர் அவலங்களுக்கு அது ஆறுதலைத் தரும். ஒரு சிலவற்றைசிந்தனைக்கு விருந்தாக பத்திபரவசத்தில் ஆழ்த்தும் எனத் தருகின்றோம்;

### திருமருகல் பதியில்

திருமருகல் திருப்பதியில் கன்னி ஒருத்தி தன்காதலனுடன் தங்கி இருக்கின்றாள். இராக்காலத்தில் நாகம் காதலனைத் தீண்டிவிட்டது நஞ்சேறி காதலன்உயிர் நீங்குகின்றான். அவ்விளங் கன்னி அது கண்டு நெடிதுயிர்த்துப் புலம்புகின்றாள். திருமருகல் பெருமான் திருக்கோயில் நோக்கிச் செப்புகின்றாள், செயல் ஒன்றில்லாள்.

'அடியவர்களாகிய தேவர் கூட்டம் உய்ய அலைகடல் நஞ்சுண்ட அமுதே' நான்முகன் நாராயணன் நாடவொணாத நீலவிட அரவணிந்த நிமலா' பொடியான காமன் உயிர் இரதி வேண்டப் புரிந்தளித்த புண்ணியனே! மணம் கமழ் மலர்ச் சோலை மருங்கு சூழும்கவின் மருகற் பெருமானேகாவாய்'

''வந்தடைந்த மார்க்கண்டன் உயிர் மேல் கோபித்து வருங்காலனைச் சிதைந்து உருள உதைத்தருளும் செய்யதாளா! இந்தக் கொடிய விடம் நீங்குமாறும் யான் இடுக்கண் குழிநின்று ஏறுமாறும் அந்தி மதிக் குழவி வளர் செய்ய வேணி அணி மருகற் பெருமானே அருளாய்- !

அவ்வழி வந்த சம்பந்தப் பெருமான் கன்னிப் பெண்ணின் கதையினை கேட்டார். திருப்பதிகம் பாடினார். வணிகன் பொங்கு விடம் தீர்ந்து எழுந்து பொலிந்து நின்றான் புகலி வேந்தர் அவர்கள் மணம் புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார்; (பெரிய புராணம்.)

### சயந்தன் வந்தனை செய்தான்

இந்திரன் மைந்தன் சயந்தன், வீரமகேந்திரபுரத்தில் சூரபன்மனுடைய சிறைக்களத்தில் தேவரோடு கிடந்து துயருறுகின்றான். ஆற்றுமையார் போற்றார் புரமடு புங்கவனைப் புந்தியில் நினைந்து வந்திக்கின்றான்.

''எல்லாத் தேவர்கள் மனத்திற்கும் அதீதமான சிவ பரம்பொருளே! அரக்கரால் அசுரரால் முனிவரால் தேவரால் பிறரால் துன்பத்தில் அழுந்தியது அல்லால் என்று தான் மகிழ்வாய் இடரற்று இருந்தோம். தண்தேன் துளிக்கும் கற்பக நீழலில் வாழவிரும்பிக் கொண்டேன். பெருந்துயரம் சுவர்க்க இன்பமும் போது என்று கண்டேன். துன்பம் தரும் பிறவி போதும் போதும். சுவர்க்க செல்வத்தை அனுபவிப்பதால் வரும் துயரும் போதும் போதும் சிதம்பர ஈசுவரா! என் துன்பத்தை விரைவில் நீக்கித் தேவரீருடையதிருவடிக் கீழ்புகலிடம் தந்தருள்க......

சயந்தன் கனவில் முருகப் பெருமான் வெளிப்பட்டார். முன்னின்று மொழிந்தருள்வார்'' நாளைய தினம் நான் திருச்செந்திப்பதி நீங்கி இப்பதி வருவோம். பத்து நாட்களில் சூரனையும் கிளையையும் கொன்று உங்கள் சிறை நீக்குவோம். உங்கள் செல்வங்களைப் பெறுவீர்கள். துன்பம் நீங்குதி.

(கந்தபுராணம்)

வருண தேவனுடைய வலிமையினால் மதுரையை அழிக்க முகில்கள் முழங்கி மழை பொழிந்தன. அது கண்ட அபிடேக பாண்டியன் ஆலவாய் ஆலயத்தை அடைந்தான் சோமசுந்தரப் பெருமானுக்குச் சொல்வான்;

''இடபவூர்தியாய்! நஞ்சருந்திய திருமிடற்றாய்! மேரு மலையின் விற்படையாக உடையாய்! அடியேங்களுடைய அல்லலினை அகற்றி, ஆடும் செயலை உடையவராகி எங்கள் இன்னுயிரைப் பாதுகாத்தருளுதல் வேண்டும்.

சிவ சண்முகவடிவேல்

# இந்தியாவை தர்மசங்கடத்தில் மாட்டியுள்ள

# இலங்கைக்கு உதவி வழங்கும் ஒஸ்லோ மாநாடு

(கொழும்பு)

எதிர் வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொள்வதா, இல்லையா என்ற முடிவை இந்தியா இதுவரையும் எடுக்கவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சரின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளுவதில் இந்தியாவிற்கு சில அரசியல் நெருக்கடிகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக 1991 ஆம் ஆண்டில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப் பட்ட வழக்கில், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தேடப்படும் குற்றவாளியாக தொடர்ந்தும் இருப்பதோடு இந்தியாவில் புலிகள் தடை செய்யப்பட்ட தீவிர வாத அமைப்பாகவும் உள்ளது.

இப்பின்னணியில் புலிகளின் அமைப்பின் பிரதிநிதிகளுடன் இந்திய அரசாங்கப் பிரதிநிதிகள் ஒரேமேடையில் தோன்றுவது இந்திய அரசாங்கத்திற்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது;

குறிப்பாக தமிழகஅரசியலிலும்இது ஒரு பிரச்சினையாக உருவெடுக்கலாம்எனக்கருதப்படுகிறது;

புலிகள் அமைப்பை தீவிரமாக எதிர்த்து வரும் அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் மற்றும்ஜனதாக்கட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி போன்றவர்கள் இந்திய அரசுபங்கேற்றால் கடுமையாக விமர்சிப்பார்கள் என்ற அச்சம் இருப்பதால் மத்தியில் ஆளும் பாரதியஜனதாக்கட்சியின் தலைமையிலான இந்த அரசு மாநாட்டில் பங்கேற்காமல் தவிர்க்க முயயக் கூடும் என்றும் அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்;

இதேவேளை, சர்வதேச அளவில் விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ள பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வதோடு இந்தியாவின் பங்கேற்பையும் விரும்புவதாககூறப்படுகிறது

இதேவேளை, இம் மாநாட்டில் இந்தியாவை பங்குகொள்ளச் செய்யும் நோக்குடன் இலங்கை பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று வியாழக்கிழமை புதுடில்லி சென்றுள்ளார்.

டில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் யஸ்வந் சிங்கை சந்தித்து இது பற்றி வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு

(2-ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### இடைவிடாப் பயிற்சி

புலன்களால் ஆளப்படும் மனத்தை அடக்கவேண்டும். இடைவிடாப் பயிற்சியும், இறைவனது உதவியும் மனத்தைக் கட்டுப்படுத்தத் தேவையாயுள்ளன. இறைவனது உதவி பெறவேண்டுமானால், பற்றில்லாமை மிகவும் அவசியம். நீச்சல் கற்றுக் கொள்கிறவன் சில நாட்கள் நீந்துவதற்கு முயற்சிக்கவேண்டும். இடைவிடாப் பயிற்சியும், முயற்சியும் பிறவிக் கடலைக் கடக்க வைத்து பிரம்மத்தின் முன் நிறுத்தும்.

சுவாமி சிவானந்தர்.

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவக் கற்கை நெறி 2002 / 2003 கல்வியாண்டில் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகக் கடிதங்கள ஏற்கனவே தபாலில் அனுப்பப் பட்டுள்ளதாக உதவிப் பதிவாளர் சி. குமாரசாமி தெரிவித்துள்ளார். (த-5)

# மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவிடம் தோற்றது

## ஆட்ட நாயகனாக அஜித்அகர்கர் தெரிவு

(யூத்பூர்)

இந்தியாவிற்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையே நேற்று யுத்பூரில் நடைபெற்ற ஆறாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்போட்டியில் இந்திய அணி 3விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 201ஓட்டங்களைப் பெற்றது இதில் சுந்தர்போல் 58 ஓட்டங்களையும், கால்கூப்பர் 38ஓட்டங்களையும், பவல் 29ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 46.2 ஓவர்களில் 7விக்கெட்டுக்களை இழந்து 202ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதன் மூலம் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. இதில் ராகுல்ராவிட் 58ஓட்டங்களையும் யுவராஜ்சிங் 54ஓட்டங்களையும் பங்கார் ஆட்டமிழக்காமல் 32ஓட்டங்களையும் பெற்றனர். நேற்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக அஜித்அகர்கர் அறிவிக்கப்பட்டார். 7போட்டிகளைக் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா மூன்று போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளன இத்தொடரின் இறுதிப்போட்டி எதிர்வரும் 24ம் திகதி நடைபெறவுள்ளது.

(ந-5)

---

### களுத்துறைச் ..........

ணியின் செயலாளர் பேனார்ட் குணதிலகா, மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப்சொலிஸிஸ்டர்ஜெனரல் பாலிதபெர்னாண்டோ ஆகியோரும் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர்.

(வ)

---

# மரண அறிவித்தல்



## பேதுரு பாவிலுப்பிள்ளை

இத்தாவில் பளையை வசிப்பிடமாகக் கொண்ட பேதுரு பாவிலுப்பிள்ளை அவர்கள் நேற்று (21-11-2002) வியாழக்கிழமை ஆனைக்கோட்டையில் இறைபதமடைந்தார்.

அன்னார் லோறன்சியாவின் அன்புக்கணவரும் லூர்துமலர், அருட்சகோதரி ஜெயசீலி (செபமாலைக்கன்னியர்மடம்), மாக்கிறெட், அல்பிரெட், மனோகரசீலி, கொலன்ஸ்ரிக்கா, அருட்சகோதரி பேணடேற், (செபமாலைக்கன்னியர்மடம்), ஜோர்ஜ்ஆகியோரின் அன்புத் தந்தையும், மைக்கல் ராசையா, இம்மானுவேல், வரப்பிரகாசம், பத்திநாதர், சாரா ஜெயமலர், வதனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் உடற்பேழை நல்லடக்கத்திற்காக இன்று (22.11.2002) பி.ப 3மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய காக்கைதீவு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| நிரந்தர முகவரி:– | தற்காலிக முகவரி:– | தகவல் |
|---|---|---|
| இத்தாவில், | குருசு மதவடிலேன், | ஆ.வரப்பிரகாசம் (மருமகன்) |
| பளை. | ஆனைக்கோட்டை. | |

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 25 01 1936



விண்ணில்: 09 10 2002

## திருமதி சிவபாக்கியம் குமாரசாமி

பாசத்தின் திருவுருவமே! எம்
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்புடன் எம்மை அரவணைத்துப்
பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கி
எங்கள் இதயங்களில் குடியிருக்கும்
அன்புத் தெய்வமே!
வார்த்தை ஒன்று கூடச் சொல்லாமல்
எம்மை விட்டுப் பறந்தோடிச்
சென்றதெங்கே?

உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு ஒருபோதும் அகலாது!
என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
த.குமாரசாமி அன்சன்ஸ்

பிரிவால் துயருறும்
கணவன்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[6216]

---

# ஹக்கீம் -மிலிந்த இந்தியா பயணம்

(புதுடில்லி)

அமைச்சர்கள் ராவூப்ஹக்கீம், மிலிந்தமொறகொட ஆகிய இருவரும் இந்தியாவிற்கு பயணமாகியுள்ளனர்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம் பெற்று வரும் சமாதானப் பேச்சுக்களின் போது, முஸ்லிம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது தொடர்பான அழுத்தங்களை இந்தியா இலங்கைமீது பிரயோகிக்க வேண்டுமென இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வற்சிங்கிடம் ஹக்கீம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொடவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வற்சிங்காவைச் சந்தித்து ஒஸ்லோ மாநாட்டில் இந்தியாவைப் பங்கு கொள்ளச் செய்யுமாறு கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம)

---

### தலைவர் பிரபாவின்...

வசதி செய்வது தமது பணி என்றும், உரையை ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ரூபவாஹினி கூட்டுத்தானப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 27ந் திகதி பிற்பகல் 6.05 நிமிடத்துக்கு முன்னர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வருடாந்த மாவீரர் தின உரையை விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

---

### வடக்குக் கிழக்கு.......

வடக்குக்கிழக்கிற்கு வழங்கப்படவுள்ள உதவிகள் தொடர்பாக இன்னொரு கட்டமாகவும், இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் உதவிகள் தொடர்பான கலந்துரையாடல்கள் பிறிதொருகட்டமாக ஆராயப்படவுள்ளது. அழிந்து போன வடக்குக்கிழக்கை புலிகளின் சம்மதம் இன்றிப் புனரமைப்புச் செய்ய முடியாது என்றும் கூறினார்.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள மாநாட்டில் விடுதலைப்புலிகளின் பிரசன்னம் தொடர்பாக பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு, பதிலளித்த அமைச்சர் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பான பேச்சுவார்த்தையில் மாத்திரமே விடுதலைப்புலிகள் கலந்து கொள்வார்கள். புலிகளின் ஒத்துழைப்பு இன்றி வடக்குக்கிழக்கை அபிவிருத்தி செய்ய முடியாது நாட்டின் அபிவிருத்தி தொடர்பான பேச்சுவார்த்தையில் அரசதரப்பினர் மாத்திரமே கலந்து கொள்வார்கள் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார் ஒஸ்லோ மாநாட்டில் பங்கு கொள்வது தொடர்பாக இந்தியா இன்னமும் தீர்மானிக்கவில்லை இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபம் சென் ஒஸ்லோ மாநாட்டில் இந்தியா பங்கு கொள்வது தொடர்பாக அமைச்சர் பீரிஸுடன் கலந்துரையாடவுள்ளார்.

25ம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா அமைச்சர் பேராசிரியா ஜீஎல்.பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட, மற்றும் உயர் அரச அதிகாரிகள் நாளை சனிக்கிழமை ஒஸ்லோ பயணமாகவுள்ளனர். இம்மாநாட்டில் பலவேறு உலக நாடுகள் அரசியல் துறைத்தலைவர்கள் பலர் கலந்து கொள்கிறார்கள் என்றும் அமைச்சர் ஜி.டி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்

(ம)

---

# ஆட்கள் தேவை

அலுவலகத்தை துப்புரவு செய்வதுடன் தேநீர் தயாரித்து வழங்கக்கூடிய (இரவுக்கடமை) சிற்றூழியர்கள் தேவை. 23.11. 2002 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நேரில் வரவும் .

வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

---




---

### ஈ.பி.டி.பி வெளியேறும்...

களுக்குமான படகு சேவை முடக்கப்பட்டுள்ளதுடன், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பிரதேச சபை, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வைத்தியசாலை, பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு சேவைகள் ஸ்தம்பித்துள்ளன.

பாடசாலைகள் இயங்காததால் 3ந் தவணைப் பரீட்சைகள் நடைபெறவில்லை. அத்துடன் அடுத்த மாதம் ஆரம்பமாகும் க.பொ.த சாதாரண தர பரீட்சை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் பாதிப்படைந்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(இ)

---

### நெடுந்தீவுக்கு .....

கடியை எதிர்நோக்கியிருப்பதாக அறியப்படுகிறது.

போராட்டம் காரணமாக படகுச் சேவை மற்றும் நெடுந்தீவுப்பகுதியினர் வழமையான பணிகள் அனைத்தும் முடங்கியிருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நெடுந்தீவுப் பகுதி மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கவென யாழ் குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளில் உணவுப் பொருட்கள் சேகரிக்கும் பணி இடம் பெறுவதாகவும் மனிதாபிமான அடிப்படையில் உணவுப்பொருட்களை வழங்குமாறு மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(இ)

---

### திருமலை மாவட்ட...

திருகோணமலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை சுமார் நான்கு மணித்தியாலங்கள் வரை இப் பேச்சுவார்த்தை நீடித்தது.

இப் பேச்சுவார்த்தையில் இராணுவ உயர் பாதுகாப்புவலயம், மீள்குடியேற்றம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது கொக்குளாய், கொக்குத் தொடுவாய், தென்னை மரவடி, கரனாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்றும், அங்குள்ள படையினரை வெளியேற்றுமாறும் நாம் கோரிக்கை விடுத்த போது இராணுவ முகாமில் இருந்து 600 மீற்றர் தூரத்தில் மக்கள் மீளக்குடியமரலாம் என்றும் அடுத்த சுற்று சந்திப்பின் போது இவை தொடர்பாக பேசுவதென்றும் அரசு, படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

---

### நாகர் கோவில் வீதி...

சேர்ந்த லெப்.கேணல் அறிவு, யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வலிகாமம் கடற்புலிகளின் பொறுப் பாளர் இனியவன் ஆகியோரும் அரச தரப்பில் பிரிகேடியர் உபாலி எதிரிசிங்கா, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திஸ்ஸகர வியத்த, லெப்டினட் கேணல் சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாகர்கோவில் பாதை திறப்பது தொடர்பாக இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்திய போதும் அது தொடர்பாக அரச தரப்பில் எந்தவிதமான இணக்கப்பாடும் ஏற்படாமல் பேச்சுக்கள் முடிவுற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

(ம)

---

விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இந்த இடங்களை பார்வையிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நிலாவெளி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், கமநலச்சேவை நிலையம் ஆகியவற்றில் இருந்து இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்றும் கேட்டபோது, பாதுகாப்புக் காரணங்களுக்காக அகற்றுவது காலதாமதமாகலாம் என்று படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

திருமலை பாட்ரிக் கோட்டையில் அமைந்துள்ள பாவநாசம் தீர்த்தக் கேணிக்கு செல்வதற்கு தடைகளை அகற்ற வேண்டும் என்றும் கட்டைப் பறிச்சான் தபாலகத்திற்குச் செல்லும் பாதை திறக்கப்படவேண்டும் என்றும் நாம் கோரிக்கை விட்டிருந்தோம என கேணல் திலக் தெரிவித்தார்.

இதேவேளை கடலில் மீன் பிடிப்பதற்கு கடற்படையினர் விதித்துள்ள கட்டுப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு கடற்படையின் உயர் அதிகாரி லெப்டினட் கொமாண்டர் தனபால என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய சந்திப்பில் புலிகளின் சார்பில் திருமலைஅரசியல் துறைப் பொறுப்பாளர் ராஜேஷ், கும்புறுப்பிட்டி அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவகுமார், கீதன் ஆகியோரும் அரச தரப்பில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, றியர் அட்மிரல் சரத்வீரசேகரா, றியர் அட்மிரல் சரத் ரட்ணகீர்த்தி, பிரிகேடியர் ஜோண் செனிவிரத்தினா, திருமலை அரச அதிபர் நெலத்தெனியா மற்றும் உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டனர்.

(ம)

---

# இலங்கை மின்சாரசபை - யாழ்.பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்பட்டு இருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 23.11.2002 காலை 9.00 - பி.ப. 4.00 | புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, அச்செழு, வடமராட்சி. |
| 30.11.2002 காலை 9.00 - பி.ப. 4.00 | காங்கேசன்துறை. |
| 07.12.2002 காலை 9.00 - பி.ப. 4.00 | இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, கோம்பயன்மணல். ஆனைக்கோட்டை, நவாலி. |
| 14.12.2002 காலை 9.00 - பி.ப. 4.00 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், யாழ் மாநகரசபைப் பகுதி . |
| 21.12.2002 | புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, வடமராட்சி, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நவாலி, கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டைத்தரிப்பு, மூளாய், மருதனார்மடம். |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்.
இலங்கை மின்சார சபை.
யாழ். பிரதேச அலுவலகம்.
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

[C/5286]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 22.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.